# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. | 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. | Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

84-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1959-ம் ஆண்டு மார்கழி மாதம் 10-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 48-ம் இலக்கம்


# பெத்லகேம் — கல்வாரி — பாத்திமா

பெத்லகேம்

சூசையப்பர் சத்திரத்தின் கதவிலே மெதுவாகத்தட்டுகிறார். அதனுள் ஏற்றப்பட்டிருந்ததீபங்கள் இருளடைந்தவீதியில் தங்கள் பிரபையைப்பிரதிபிம்பிக்கின்றன. சத்திரவாயிற்படியில் குளிர்அதிகமாயிருக்கிறது. அங்கு காத்துநிற்கும் சூசையப்பருக்கும், மரியம்மாளுக்கும்முன்பாகத் திடீரெனச் சத்திரத்தின்கதவு திறக்கப்படுகிறது. அதனுள்ளிருந்துவந்த பிரகாசம் அவர்கள்மேல் விழுகிறது. உள்ளேயிருந்து பிறக்கும் சந்தோஷஆரவாரம் அவர்கள்செவிகளில் சப்திக்கிறது. அப்போது சத்திரத்தின் தலைவன் அதன்வாயிலில் பதமையாக வந்துநிற்கிறான். ஒரேகண்ணோட்டத்தில் அவர்களைக் கணித்துவிடுகிறான்.

வாயிற்படியில்நிற்கும் தம்பதிகள் ஆடம்பரமற்ற — அதிகம் சாதாரண உடைகள் தரித்திருக்கிறார்கள். வெளித்தோற்றத்தைக் கொண்டு அவர்கள் ஓர்பெருங்குலத்தைச் சேர்ந்தவர்கள்அல்ல, பெருஞ் செல்வந்தர்கள் அல்ல, பிரதாபம்பெற்றவர்களும் அல்ல, பராக்கிரமம் படைத்தவர்களும் அல்லஎன்றே மட்டிடுகிறான். அதனால் சூசையப்பர் யாதும் பேசத்தொடங்குமுன்னரே அவன் கதவைஇலகுவில் சாத்தும்படியாகப் பின்னிடத்தொடங்குகிறான்.

"அப்போது சூசையப்பர் களைகொண்டுவாடிச் சோர்ந்தவதனத்துடன்நிற்கும் தமதுதிருப்பத்தினியைச் சுட்டிக்காட்டி, "அவள் குழந்தையைக் கர்ப்பத்தில் கொண்டிருக்கிறாள்" என்று பரிந்துபேசுவார்போல் உருக்கமாக மொழிகின்றார். மொழிந்தும் என்ன; "சத்திரத்தில் இடமில்லை"என்று கண்டிப்பான பதில்கிடைத்தது. அதனால்சூசையப்பரும், கன்னிமரியம்மாளும் புகலிடமற்றஉலகில் திரும்பவும் தனிமையாக விடப்படுகிறார்கள். வீதியில்நின்று குளிரினால் விறைக்கிறார்கள். உலகசந்தோஷங்களில் உழன்று பொழுதைப்போக்கும் பெத்லகேம் நகர்வாசிகள்மத்தியில் உலகத்தைஇரட்சிக்க மனுஷாவதாரமெடுத்த இறைவன் உறைவிடமின்றி நடுவீதியில் நின்று தவிக்கின்றார்.

சத்திரத்தில் "இடமில்லை." மற்றும்சாவடிகள் வீடுகளிலும் "இடமில்லை," "இடமில்லை" என்றசொல்லேஎங்கும். சூசையப்பரும், மரியம்மாளும் கவலைசூழ்ந்தவர்களாய்ப் பதமையாகநகர்ந்து அப்பால்செல்லுகிறார்கள் எங்கே போகிறோம் என்பது அவர்களுக்கே தெரியவில்லை. ஆனால், ஏதோஒருஇடத்தை அவர்கள் கண்டுகொள்ளத்தான்வேண்டும். ஆனால், எங்கே? அப்போது மரநிழல்களினூடாகப் பழையகட்டிடம்ஒன்று மங்குளமாகத்தோற்றுகின்றது. சூசையப்பர் கருத்தூன்றி அதனைநோக்குகின்றார். மரியம்மாளின் இதயம் கவலைதோய்ந்ததாக, அவள்விழிகள் கீழ்நோக்குகின்றன.

ஆம்,அஃது ஓர்மாட்டுத்தொழுவம், காய்ந்தபுல், வைக்கோல் சேர்த்துவைப்பதற்கும், ஆடுமாடுகளுக்குமான ஓர் அபக்குவமான கட்டிடம். சூசையப்பர் அங்கு போகும்வரை ஒவ்வோர்படிக்கும் மரியம்மாளின் கரத்தைத் தாங்கியவராய் அடியெடுத்து வைக்கின்றார். அவளும் அவர்காட்டும் வழியே அடிமேல்அடியெடுத்து வைத்து நடந்துசெல்லுகிறாள். அப்போது "இங்கே நீங்கள்வரப்படாது; இடமில்லை" என்று சொல்ல எவராவது அங்கும் இருக்கின்றனரோ என்று சூசையப்பர் சிந்திக்கிறார். ஆனால், அப்படியானஒருவர் அங்குஇருக்கவில்லை. இருவரும் அதன்வாயிற்படியைச் சேருகிறார்கள். அவர்கள் வந்திருப்பதை அங்கிருந்த மிருகங்கள் கண்டுகொள்ளுகின்றன.

அவர்கள் உள்ளே வரப்படாதென்று இந்தப்பிராணிகளும் சொல்லித் தடைபண்ணுமா? மேலான அறிவுடன் தேவன் படைத்தவர்களைப்போல் அவைகளும் ஈனவிரக்கமில்லாதிருக்குமா? அவர்களைக்கண்டதே அவைகள் பின்புறமாகஒதுங்கி வழிவிடுகின்றன. சூசையப்பரும், மரியம்மாளும் வைக்கோல்இருந்த ஓர்மூலைக்குச் செல்லுகின்றார்கள். மரியம்மாள் அங்கேதங்கச்சென்றபோது, இங்கே அச்சமில்லையென்று நிச்சயித்துச் சொல்வனபோன்று அவர்களுக்குச் சமீபமாய்ச் செல்கின்றன, அந்தவாய்பேசஅறியாத மிருகங்கள். சூசையப்பருக்கும், மரியம்மாளுக்கும், திருக்குழந்தையேசுவுக்கும், மாட்டுத்தொழுவத்தில் கடைசியாகஇடம் கிடைத்தது.

கல்வாரி

பெத்லகேம் சம்பவம்நிகழ்ந்து 12 ஆண்டுகள்— 30 ஆண்டுகள்— இல்லை, 33 ஆண்டுகள் கழிகின்றன. "அவனைச் சிலுவையில் அறைந்துகொல்லுங்கள்; அவனைச் சிலுவையிலறைந்து கொல்லுங்கள்"என்று சனக்குழாம் குரவையிடுகின்றது. அவளுடைய திருமகனுக்கு என்ன நிகழ்கின்றது என்பதை ஒவ்வோர்தாயும் அறிவாள்.

[ தொடர்ச்சி 5-ம்பக்கம் ]

### இறைவனால் அனுப்பப்பட்டவர் என்கிறார் பிரிவினைச் சபைத் தலைவர்

நியூயோர்க் நகரிலிருந்துபோன பிரிவினைச்சபை அதிமேற்றிராணியார்ஒருவர் கனடாதேச ஒற்றுவா நகரில் அன்றுபேசியபோது: "23-ம்அருளப்பபாப்பரசர் ஓர் புனிதமானகருமத்தைப் பூர்த்திசெய்து, கிறீஸ்தஉலகிற்கு ஐக்கியத்தைக் கொண்டுவருமாறு தேவனிடமிருந்துஅனுப்பப்பட்டவர்" எனக்கூறலாயினர். கிறீஸ்தவசபைகளைத் திரும்பவும் ஐக்கியப்படுத்துவதானது எந்தஒரு கிறீஸ்ததலைவரினதும் மாபெரும் இலக்காகும்" என்று இந்தப் பாஷிர்அதிமேற்றிராணியார்கூறுகின்றார். இவர் வடஅமெரிக்கா முழுவதிலும் பரந்திருக்கின்ற பிரிவினைக்கிறீஸ்தவர்களின் தலைவராயிருந்து அவர்களைப் பரிபாலனஞ் செய்துவருகின்றார். "கிழக்கும்,மேற்குமாக இரண்டிலுமுள்ள பொதுச்சபைகளாலே துணைசெய்யப்பட்டால் அருளப்பபாப்பரசர் அறிவித்துள்ள திருச்சபைப்பொதுச்சங்கம் வெற்றிகரமுடையதாகும்; கத்தோலிக்கருக்கும், பிரிவினைக்கிறீஸ்தவர்களுக்குமிடையிலுள்ள முக்கிய வேறுபாடு பாப்பரசரது அதிகாரத்தின் மட்டிலேயாகும்; நாம் அவரின் கௌரவதலைமையை அங்கீகரிக்கிறோம்; ஆனால், அவரின் அதிகாரதலைமையை அல்ல"என்றும் இவர்கூறலாயினர்.

# இகழாதீர், தீங்கிழையாதீர், காட்டிக்கொடாதீர்!

## பத்திரிகை எழுத்தாளருக்குப் பாப்பரசரின் அறிவுரை

"உண்மை, நேர்மை, கடமை உணர்ச்சி ஆகியன பத்திரிகை எழுத்தாளரை வழிநடத்தும் மூன்றுமுக்கிய குணங்களாய் இருக்கவேண்டும்" என்று அருளப்பபாப்பரசர் பத்திரிகைகள், சஞ்சிகைகளின் எழுத்தாளருக்கு அளித்தபேட்டி ஒன்றில் கூறினாரெனச் சென்ற30-ந்திகதி திங்கட்கிழமை வத்திக்கானிலிருந்து தந்திச்சமாச்சாரம் கிடைத்துள்ளது,

இத்தாலிய சஞ்சிகைகள், பத்திரிகைகளின் பிரசுரகாரர் ஆசிரியர்களை முதல் நாள்29-ந்திகதியன்று விசேஷபேட்டி ஒன்றுஅளித்து வரவேற்று அவர் பேசியதாவது: "பத்திரிகைகள், சஞ்சிகைகள்ஆகியன 'எவருக்கும் தீங்கிழைக்கக்கூடாது, எவரையும் காட்டிக்கொடுக்கலாகாது, அன்றேல் எவரையும் கீழ்த்தரமாக இகழவும்கூடாது.' தங்கள்பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் படிக்கிறவர்கள் தங்களுக்கு அறிமுகமில்லாத ஓர் மக்கள்கூட்டமென்றோ, வெற்றுடலமென்றோ கருதும்மனப்பான்மை பத்திரிகை எழுத்தாளரிடம் இருத்தல்கூடாது. ஆனால், அவர்கள் இறைவனின் மக்கள்— கிறீஸ்துநாதரின் சகோதரர்கள் என்றஉண்மையை பத்திரிகை எழுத்தாளர்கள் மறந்துவிடக்கூடாது.

"பத்திரிகைகளைப் படிக்கிறவர்களில் பெருந்தகைமை வாய்ந்த ஆனால், போதியஅனுபவமற்ற வாலிபர்களும் இருக்கின்றார்கள். தங்கள்பிள்ளைகளுக்கு நல்லபுத்தியும், அறிவும் புகட்டப்படவேண்டுமென்ற உணர்ச்சி கொண்ட தந்தையர்களும், தாய்மார்களும் இருக்கின்றார்கள். இவர்களெல்லாம் ஒழுக்கசிலர்கள் என்பதைப் பத்திரிகைஎழுத்தாளர்கள் மறந்துவிடக்கூடாது." பாப்பரசர்நிகழ்த்திய இந்தஉரை 30-ந்திகதியன்றுதான் அதிகாரபூர்வமாக வெளியிடப்படலாயிற்று.

# மாமாவின் பரிசில்பெற்ற கிறிஸ்மஸ் கதைகள்

தெரேசாவும், றீத்தாவும் இரட்டைப் பிள்ளைகள். அவ்வாறே அருளும், அன்ரனும் இரட்டைப்பிள்ளைகள். நால்வரும் ஒரே தாயின் உதரக்கனிகள். தெரேசாவையும், றீத்தாவையும் பார்த்தால் தெரேசா யார்? றீத்தா யார்? என்று வேறுபாடுகண்டுகொள்ள முடியாதவகையிலே இருவருக்கும் ஒரே மாதிரியான முகச்சாயல். ஒரேமாதிரியான உடற்சாங்கம். போக்குவாக்கிலும் இருவரும் ஒரே மாதிரித்தான். போதாக்குறைக்கு எப்போதும் ஒரே மாதிரியான உடைகளையே தரித்துக் கொள்வார்கள். அங்குள்ளபுனிதபிலோமிஞ மடத்துக் கலாசாலையில் நாலாம் வகுப்பில் இருவரும்ஒருங்கே படித்து வந்தார்கள்.

அவ்வாறே அருளும், அன்ரனும் தனிமையாகச் சென்ருலென்ன, சகோதரராகக் கூடிச்சென்ருலென்ன, அருள் யார்? அன்ரன் யார்?என்று வேற்றுமை கண்டுகொள்ள முடியாதவகையில் உருவத்திலும், நிறத்திலும், அழகிலும், உடையிலும் காணப்படுவார்கள். இவர்கள்இருவரும் அங்குள்ளபுனிதவளனூர் கல்லூரியில் ஆறும்வகுப்பில் படித்து வந்தார்கள்.

அங்ஙனமாக இவர்களின்மாமனூர் தூரமான ஓர்பட்டணத்தில் உத்தியோகமாயிருந்தார். காலம்வந்தும் இன்னுமே கலியாணஞ்செய்யாது பிரமச்சாரியாக வாழ்ந்தார். அதனுல் தனதுசகோதரியின் இரட்டைப்பிள்ளைகள்நால்வரிலும் மட்டற்றஅன்புகாட்டிக் காலந்தோறும்— விசேடமாய் அவர்களது பிறந்த பெருநாளின் போதும் சோடிசோடியாக அழகான உடைகளும், சொக்கிளேற்முதலாம் இனிப்புப் பண்டங்களும், மற்றும்வெகுமதிகளும் அனுப்பும் வழக்கமுடையவராய் இருந்துவந்தார். குணநாயகம் என்றபெயர் அவருக்குப் பதினுயிரம்முறையும் பொருந்துமென்றே சொல்லலாம். ஏனெனில், அவ்வளவு தங்கமான குணம் அவருக்கு. குணமாமா என்றுலே போதும் பிள்ளைகள் நால்வருக்கும் உள்ளம்குளிர்ந்துவிடும். ஏனெனில், அவரிலே அவ்வளவுபட்சம் அவர்களுக்கு.

### குணமாமா வருகின்றூர்

நிற்க, அன்று ஒருநாள்இரவு வீட்டிலே குடும்பசெபமாலைமுடிந்ததும் தாய் வழமைபோல எல்லோருக்கும் சாப்பாடுஆயத்தம் செய்துகொண்டிருந்தாள். தந்தையும், பிள்ளைகளும் நடுச்சாலேயில் அமர்ந்து, ஒருவரோடொருவர் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது தெரேசா பேச்சைத் தொடக்குகிருள்.பப்பா,கிறிஸ்மஸுக்கு இன்னும் பதினைந்துநாள்தான் இருக்கிறதென்று சிஸ்றர்இன்றைக்கு வகுப்பிலே சொன்ஞ. இன்னும் பத்துநாள்தான் படிப்பாம். பிறகு கிறிஸ்மஸ் விடுமுறையாம்.

தந்தை: வேறு என்ன சொன்ஞ சிஸ்றர்?

தெரேஸ்: வேறொன்றும் அவ சொல்லவில்லை பப்பா!

றீத்தா: இல்லை, பப்பா, இன்னும் ஒன்று சொன்னவ. விடுமுறைஅன்று எங்களுக்கெல்லாம் சின்னச்சின்னக் கிறிஸ்மஸ் வெகுமதிகள் தந்து அனுப்புகிறது என்றும் சொன்ஞ.

அருள்: பப்பா! குணமாமா வந்தாரென்ருல் எங்களுக்கு என்னஎன்ன வெகுமதியெல்லாம் தருவார். போன கிறிஸ்மஸுக்கும் அவர் வரவில்லை. இந்தக் கிறிஸ்மஸுக்கும் வருகிருரா, இல்லையா, பார்ப்போம் இருந்து.

அன்ரன்: இந்தக் கிறிஸ்மஸுக்குக் குணமாமா கட்டாயம்வருவார் இருந்து பாருங்கள்.

தெரேஸ்: வாராவிட்டால்!

றீத்தா: வாராவிட்டால் உடுப்புகள், விளையாட்டுச்சாமான்கள், சொக்ளேற், கேக்எல்லாம் கனக்க அனுப்பிவைக்கும்படி நாங்கள் எழுதுவோம்.

அருள்: அப்படி எழுதப்படாது. மாமாவையே இங்குவரும்படி எழுத வேண்டும்.

அன்ரன்: பப்பா, நீங்கள் எழுதினுல் மாமா கட்டாயம் வருவார். தட்ட மாட்டார்.

தெரேசாவும், அருளும்: ஆம், பப்பா, நீங்கள்தான் எழுதுங்கள், நீங்கள் எழுதினுல் மாமா நிச்சயமாக வருவார்.

தந்தை: இல்லை, அவரை வரும்படி கேட்டு நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருகடிதம் எழுதுங்கள். அப்போது அவருக்குப் பெரியசந்தோஷமாய் இருக்கும். கடிதங்களைக்கண்ட மறுநாளே சிலவேளை புறப்பட்டுவருவார்.

அன்ரன்: பப்பாசொல்லுகிறது ஒரு நல்ல புத்திதான். நாங்கள் எழுதினுல் அவர் கட்டாயம் வருவார்.

தந்தை: சரி, நாளைக்கு நீங்கள் பாடசாலைமுடிந்து வந்ததும் அவருக்கு ஒவ்வொருகடிதம் எழுதித்தாருங்கள், நான் அவைகளை ஒன்ருகச்சேர்த்துத் தபாலில் அனுப்பிவைக்கிறேன்.

தாய்: சாப்பாடு ஆயத்தம் வாருங்கள் எல்லாரும்.

மறுநாள் பிள்ளைகள் நால்வரும் பாடசாலையிலிருந்து வீடுதிரும்பியதும் சாப்பிட்டுவிட்டுக் கடிதம்எழுதத் தொடங்கினுர்கள். தெரேசா ஆசைமாமாஎன்றும், றீத்தா அன்புமாமா என்றும், அருள் அருமை மாமா என்றும், அன்ரன் நல்லமாமாஎன்றும் கடிதத்தைத் தொடக்கித் தாங்கள் நினைத்தது, நினைத்ததையெல்லாம் எழுதினுர்கள். ஏறக்குறையக் கடிதங்கள்எழுதி முடிகிறதருணமாயிற்று. அப்போது வீட்டின் தெருவாயில் கதவின்பக்கமாகக் கணீர் கணீரென்று மணிச்சப்தம் கேட்டது. அன்ரனும், அருளும் அம்மா! தந்திஎன்றனர். அன்ரன் ஓடிச்சென்று கையெழுத்தை வைத்துவிட்டுத் தந்தியைப்பெற்றுச்சென்று தாயிடம் கொடுத்தான். கொடுத்ததும் தாய் அதனைப்பிரித்து வாசித்தபோது அவள்முகத்தில் புன்னகை மலர்வதைக் கண்டபிள்ளைகள் என்னஅம்மா சிரிக்கிறீர்கள்? என்று அங்கலாய்ப்புடன் கேட்டார்கள். தாய் மேலும் புன்னகையுடன், உங்களுக்கு ஒருநல்லசெய்தி; குணமாமா நாளைக் காலை வருகிருராம்; பப்பாவை றெயில்வே ஸ்ரேஷனில் வந்து காத்திருக்கட்டாம் என்று சொன்னதுதான் தாமதம் பிள்ளைகள் நால்வரும் எழுதியகடிதங்களை அந்தமட்டிலே சட்டென நிறுத்தி ஆசனங்களைவிட்டு எழுந்தார்கள். குணமாமாவருகிருரென்று சொல்லிக்கொண்டு அன்ரன்ஒருகால் துள்ளிக் குதித்தான். அருள் குதூகல மிகுதியால் எழுதியகடிதத்தை அப்பால் சுழற்றி எறிந்துவிட்டுக் கூத்தாடத் தொடங்கினுன். தெரேசாவும், றீத்தாவும்ஆடினுர்கள், பாடினுர்கள், ஆனந்த நடனஞ் செய்தார்கள். அன்றிரவு நால்வருக்கும் மாமாவைப்பற்றிய கனவாகவே இருந்தது.

கடைசியாக மறுநாட்காலை 8மணிக்குக் குணநாயகம்மாமா வந்துசேர்ந்தார். அவரைக்கண்டதே பிள்ளைகள் நால்வரும் ஓடிச்சென்று அவர்கரங்களைப் பற்றிப்பிடித்து, மாமா என்று ஆர்ப்பரித்தபடியே வீட்டினுள்அழைத்துச் சென்ருர்கள். அங்கே அவர்களை அவர் வாரியணைத்து முத்தமிட்டுத் தான்கொண்டுவந்த சிலதின்பண்டங்களை அவர்களுக்குக் கொடுத்தார். அன்றுமுழுவதும் அவர்களுக்கு ஒரு திருவிழாத்தான்.

கடைசியாகப் பொழுதுமறைந்தது. இருள்படர்ந்தது. வீட்டிலே தீபங்கள் ஏற்றப்பட்டன. பிள்ளைகள் மாமாவைப்புடைசூழ்ந்து முன்போலக் கதை சொல்லுங்கள், கதைசொல்லுங்கள் என்று அவரை ஒரேபிடியாகப் பிடித்துக் கொண்டார்கள். அவரும் சுவிசேஷக் கதைகள்என்றும், நல்லபடிப்பினைக்குரிய கதைகள்என்றும், ஹாஸ்யக் கதைகள்என்றும் அநேக கதைகளை இராவேளைதோறும் சொல்லிவந்து, ஒருநாள்இரவு அவர்களை நோக்கி, கிறிஸ்மஸ் இதோ வந்துவிட்டது; நீங்கள் நல்லகதைகளாய் ஒவ்வொருவரும் ஒவ்வோர் கிறிஸ்மஸ்கதை ஆயத்தப்படுத்திச் சொன்னுல் முதல்தரமான கதைக்கு வெகுமதிகொடுப்பதாகத் தெரிவித்து, உங்களுக்கு இது சம்மதம் தானே என்றுகேட்டார். அவர்களும் ஆம்மாமா, சரி வரட்டும்மாமா என்று சம்மதி தெரிவித்தார்கள். (தொடரும்)

---

# குருவாகவந்த பூசைப்பரிசாரகன்

## தேவநற்கருணை வழங்கிய வீரச்சிறுவன்

(சென்றவாரத்தொடர்ச்சி)

சுமார்இரண்டரை வருடகாலம் சுகானேபள்ளத்தாக்கு இரத்தவெள்ளமாகக் காட்சியளித்தது. வளம்பொருந்திய அதன்கோதுமைவயல்களும், செழுமைபொருந்திய திராட்சத் தோட்டங்களும் கைவிடப்பட்டுக் கட்டாந்தரைபோல் காணப்பட்டன. ஈற்றில், அந்தக்கோரயுத்தம் ஒருவாறு முடிந்தது. அகிலமுழுவதும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த சமாதானம் சுகானேபள்ளத்தாக்கிலும், நெவெல் கிராமத்திலும் பிறந்தது. ஆனுல், கண்ணீர்ப் பிரவாகத்தினதும், பிரலாபத்தினதும் மத்தியில்தான் அது பிறந்துவரலாயிற்று.

யுத்தத்திலே தங்கள்கணவரை இழந்த விதவைகளின்புலம்பல் ஒருபக்கம். மீளவும் சுகானேபள்ளத்தாக்கைப் பண்படுத்திச் செய்கைபண்ண இனிமேல்ஒருபோதுமே வரப்போகாத புதல்வர்களை இழந்த பெற்ருேரின் புலம்பல் மறுபக்கம். தங்கள் அருமைத் தந்தையர்களை இழந்தஅநாதர்களின் புலம்பல் இன்னோர்பக்கம், வறுமையின்வாய்ப்பட்டுப் பசிப்பிணியால் வாடிய ஏழைமக்களின்புலம்பல் பின்னோர்பக்கம். ஆனுல், இவர்களின் கண்ணீரைத்துடைக்க எவருமேயிருக்கவில்லை. அதனுல்அவர்களின் கன்னக் குழிகளிலே அவர்களின் கண்ணீர் உறைந்து உலர்ந்துபோயிருந்தது. ஆயினும் சுகதுக்கம் சுழல்சக்கரம். மானிடர்வாழ்க்கையில் இன்பமும்துன்பமும் மாறிமாறிவந்துகொண்டிருப்பது சகசம்அன்ருே! யுத்தத்தில் அழிபட்டுப்போன அவர்களது பழைய இல்லங்களினிடமாய்ப் படிப்படியாக நவமான வீடுகள்எழும்பின. வசந்தகாலத்திலே கோதுமைப்பயிர் ஏற்றப்பட்டும், திராட்சைக்கொடிகள் நாட்டப்பட்டும் செழித்தோங்கிவளர்ந்து, பச்சைப்பசேலென்றிருந்தன. பட்சிசாலங்கள் முன்போல இன்பகானம் இசைக்கத்தொடங்கின. சுகானேபள்ளத்தாக்கில் திரும்பவும்சூரியன் இன்பமாகச்சுடர்விட்டொளிர ஆரம்பித்தது.

என்றும்போலக் காலச்சக்கரம் சுழன்றுகொண்டிருந்தது. பதினைந்து ஆண்டுகள் உருண்டோடின. 1932-ம் ஆண்டுபிறந்து இரவுபகலாக நகர்ந்துகொண்டிருந்தது. அன்று ஓர்ஞாயிற்றுக்கிழமைகாலை நெவெல்என்ற அந்தச் சிறியகிராமம் பெருந்திருவிழாக் காலத்தில்போன்று அலங்காரகோலம்பூண்டு தேசோமயமாய்விளங்கியது. ஒவ்வோர் இல்லத்திலும் சன்னல்களிலிருந்து பலவர்ணக்கொடிகள் அசைந்தாடிய வண்ணம் ஆனந்தநிர்த்தஞ் செய்தன. கோவில்வாயிலிலே தேவதாருமரங்கள் கொண்டு ஆக்கப்பெற்று வெற்றிக் கோலம்அளித்துநின்ற தோரணமாடம் ஒன்று நிறுவப்பட்டிருந்தது. அப்போது நவமாக அபிஷேகஞ்செய்யப்பெற்ற குருவானவர்ஒருவர் தமது சொந்தக்கிராமத்திலே தம்முடைய முதற்பூசைப்பலியை ஒப்புக்கொடுக்குமாறு சிலகுருமாருடன் திரும்பவும் அங்குவந்து அமைதியாகக் கோவிலுள் பிரவேசித்தார். இந்தப்புதியகுரவர் யாராயிருக்கலாம்? ஆம், இவர்தான் வண. லீனேசுவாமியார். இற்றைக்குப் பதினைந்துவருடங்களின் முன்னே அந்தப்பயங்கரமிக்க அபாயகரமான அர்த்தசாமத்திலே அவரிடமிருந்து— அப்போது எட்டுவயதுப்பாலியராயிருந்த அந்தப்பூசைப்பரிசாரகரிடமிருந்து திவ்வியநன்மை பெற்றுக்கொண்டவர்களாய் இன்னுமேஉயிரோடிருந்த சிலருக்கு வண. லீனேசுவாமியாரின் முதற்பூசை ஓர்கனுப்போல்— ஓர்சம்மனசின்காட்சிபோல் தோன்றியது. "ஆனுல், பரமண்டலங்களிலே இருக்கிற எங்கள் பிதாவே; உம்முடையசித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுமாப்போலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள்அப்பம் எங்களுக்கு இன்று தாரும்." என்ற வசனங்களை அவர் பாடியபோது அவருடைய குரல் எவ்விதம்தெற்றித் தடுமாறியதுஎன்பதை அவர்கள் ஞாபகப்படுத்திக்கொண்டார்கள். இப்போதும் அவரிடமிருந்தே— அப்போது அவர் தமதுமார்புடன் இறுகத்தழுவியிருந்த அதேபாத்திரத்திலிருந்தே அவர்கள் திவ்விய நன்மை பெற்றுக்கொண்டார்கள். அதே லீனேதான் இவர் — ஆனுல், தனதுகன்னங்களிலிருந்து இளமையின் றேஸாப்புஷ்பம்போன்ற சிவந்த அழகொளி மறைந்தவராயும், அதிகம் மெலிந்தவராயும் இருக்கிருரேயென்று அவர்கள் பேசிக்கொண்டார்கள். ஆனுல்,அவர் இனிமேல் லீனே அல்லவென்றும் அறிந்துகொண்டார்கள். ஆசீர்வாதம் அருளியபோது அவர்களுக்குமேலாக உயர்த்தப்பட்ட அவரின்திருக்கரத்தில் அபிஷேகதிருத்தைலங்கள் இன்னுமே துளித்துக்கொண்டிருந்தன. லீனே இன்று குருவானவர். அதுவும்என்றென்றைக்கும். சுபம்!

---

### நேயர் கடிதம்

(இளைஞர்பக்கத் தொடர்ச்சி)

கட்டுரையை ஆரம்பிக்கும்படி தாழ்மையாய் வேண்டுகிறேன்.

கடைசியாய் ஒருகேள்வி, இந்தப் பகுதிக்கென எழுதும் இளைஞர்களுக்கு வயது வரையறை ஏதும்உண்டா?

எமது கடைசிமூச்சுபரியந்தம் எமது இரட்சகருக்காக எமது உயிரைவிட்டேனும் உழைப்போம்.

கடைசியாக எனது தாழ்மையான வணக்கத்துடன் மடலைமடித்துக் கொள்ளுகிறேன்.

அன்புள்ளதங்கை
**செல்வி பி. எம். ஜோஸப்பின்**

ஜெம்பட்டாதெரு
கொழும்பு 22-11-59.

* * *

[செல்வி யோஸப்பின் விடுக்கும் விண்ணப்பம் மிகவும் நன்று. கூடியளவில் திருப்திப்படுத்தத் தெண்டிப்போம். முதியோர் அல்லாதோர் எவரும் இப்பக்கத்துக்கெழுதலாம்] (ஆசிரியர்.)

## கருதினால்மார் திருச்சங்கமும் கருதினால்மாரும்

அருளப்ப பாப்பரசர் சென்ற மார்கழியிலே கருதினால்மாரின் தொகையை 75 பேராக உயர்த்தியருளினார். இப்போது அத்தொகையை 79 பேராக உயர்த்தியிருக்கின்றார். அதனால் அவர் முன்பு 70 பேராயிருந்துவந்த கருதினால்மாரின் பாரம்பரியமான தொகையைத் தமது பன்னிருமாத ஆட்சி காலத்திலே இரண்டாம் முறையாக உயர்த்தி ஓர் புதியசாதனையை உண்டுபண்ணியிருக்கின்றார். கருதினால்மாரின் தொகையை 75 பேராக உயர்த்தியதுமுதல் இதுவரை நான்குகருதினால்மார் காலஞ் சென்றுள்ளனர். பாப்பரசர் எட்டுப்புதிய கருதினால்மாருக்கும் அவர்களின் பதவிக்குரிய தலைச்சீராக்களை வழங்கும்தினமாகிய இம்மாதம் 17-ந்திகதியன்று அவர்களில்ஒருவர் நிச்சயமாகச் சமுகமளிக்கமாட்டார். பிரான்ஸிலே அப்போஸ்தலிக்க ஸ்தானிகராய் இருந்துவருகின்ற மறெல்லா அதிமேற்றிராணியாரே அவர். பாரம்பரியத்தைப் பின்பற்றி அவர் பிரான்ஸியஜனாதிபதி தெகோல் அவர்களிடமிருந்தே அதைப் பெற்றுக்கொள்வார். புதியகருதினால்மாரில் மூவர் இத்தாலியர். இருவர் அமெரிக்கர். ஒருவர் ஸ்கொத்திலாந்தர். ஒருவர் ஸ்பானியர். ஒருவர் ஜேர்மனியர். புதியகருதினால்மார் திருச்சங்கத்தில் 31பேர் இத்தாலியராயும், 48 பேர் பிறசாதியினராயும் இருப்பார்கள். இத்தாலிக்குப்பின் அடுத்தபடியாகத் தொகையளவில் பிரான்ஸ் ஏழுகருதினால்மாரையும், ஐக்கிய அமெரிக்க தேசம் ஆறுகருதினால்மாரையும், ஸ்பெயின ஐந்துகருதினால்மாரையும் கொண்டிருக்கும்.

---

### தைரியம் பிறக்கவேண்டுமா
### சுவிசேஷத்தைக் கவனியுங்கள்

பேராபத்துகள் வரப்போவதாய் எடுத்துக்கூறப்படும் அத்தனை அநேகமான தீர்க்கதரிசனங்களை எதிர்த்துநிற்பதில் தைரியம்பிறக்குமாறு கிறீஸ்தவர்கள் சுவிசேஷத்தை ஆராய்வாகக் கவனிக்க வேண்டுமென்று அருளப்பபாப்பரசர் அன்றுதினம் அளித்த பேட்டிஒன்றில் கூறலாயினர். "சுவிசேஷத்திலே இக்காலத்தினதும், எதிர்காலத்தினதும் நாகரீகத்தின் அஸ்திபாரங்கள் இருக்கின்றன; மக்கள் சிலர் எதிர்காலத்தைப்பற்றிக் கவலைதெரிவித்து, பேராபத்துக்களினதும், அழிவினதும் கால எல்லைகளைப்பற்றிச் சிந்திக்கிறார்கள்; இவைகள் சம்பந்தமாய்ச் சுவிசேஷத்தில் நாம் அறிவிக்கப்பட்டிருக்கிறோம்; அதிலே உலக முடிவைப்பற்றி விரிவாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது; ஆகவே, நாம் ஆண்டவரின் திருவாக்கில் நம்பிக்கை வைப்பதும், அவருடைய போதனைகள்மட்டில் விசுவாசமாயிருப்பதும், சீவியத்தினதும், நம்பிக்கையினதும் இதே அஸ்திபாரங்களை எதிர்காலசந்ததிகளுக்கு — அநேகாநேக சந்ததிகளுக்குப் பரம்பரை பரம்பரையாக விட்டுப்போவதும் நம்முடைய கடமையாகு"மென்று பாப்பரசர் கூறித் தமதுசொற்பொழிவைமுடித்தார்.

## ஆண்டிலே மும்முறை நிகழும் அற்புத சம்பவம்

இத்தாலியிலே நேப்பிள்ஸ் நகர் ஆசனக்கோவிலில் இருந்துவருகின்ற அர்ச். ஜனுவாரியுஸின் திருஉதிரம் சமீபத்திலே அவருடைய திருநாளன்று வழமைபோல அற்புதமாகஉருகி நீர்மயமாயிற்று. நேப்பிள்ஸ்நகரின் பாதுகாவலரான அவரை மகிமைப்படுத்துமாறு ஒன்றுகூடிய பக்தர்குழாங்களுக்குக் கோவில் திறந்துவிடப்பட்டு ஏறக்குறையப் 15 நிமிஷங்களின்பின் இது நிகழலாயிற்று. தங்களது "சான் ஜென்னரோ"வுடன் சம்பந்தப்பட்ட அயனாந்த இவ்வற்புதக்காட்சியைக் கண்டுகொள்வதற்காகப் பல்லாயிரக்கணக்கான நேப்பிள்ஸ்நகர்வாசிகள் அநேகமான உல்லாசப் பிரயாணிகளுடன் கோவிலில் தேங்கியிருந்தார்கள். சமீபமான பொஸுவோலி என்ற மற்றோரிடத்திலுள்ள அர்ச். ஜனுவாரியுஸின் திருஉதிரமும் உருகிநீர்மயமானது. இங்குதான் கி. பி. 305-ம் ஆண்டளவில் தியோக்கிளேஸியன் நடத்திய வேதகலாபனையின்போது இவ்வர்ச்சியசிட்டவர் சிரச்சேதம் செய்யப்பெற்று வேதசாட்சியானார். ஜனுவாரியுஸ் வேதசாட்சியாக மரணமடைந்த கல்லின்மீதுள்ள அவரது இரத்தக் கறை அடையாளங்களும் சிறிது வேளையின்பின் வரண்டுகாய்ந்த தங்கள்தோற்றம்நீங்கி ஈரத்தன்மை அடையலாயின. நேப்பிள்ஸ் நகரிலே ஓர்கண்ணாடிக் குப்பியில் வைத்துப் பாதுகாக்கப்பட்டுவரும் அவருடையஉதிரம் புரட்டாசி 19-ந்திகதியிலும், மார்கழி 16-ந்திகதியிலும், வைகாசிமாதத்தின் முதல்ஞாயிறுக்கு முந்திய சனிக்கிழமையிலும் அற்புதமாக உருகிநீர்த்தன்மையடைகின்றது.

—*—

## பிறேஸில் நாட்டில் குடியேறப்போகும் ஜப்பானிய கத்தோலிக்க குடும்பங்கள்

ஓர்ஜப்பானியகுருவரான வண. றெற்சூஜி சஸாக்கிசுவாமியாரின் அயராமுயற்சியால் ஓர்ஜப்பானிய தீவிலுள்ள கத்தோலிக்கமக்கள் அனைவரும் தென்னமெரிக்காவைச்சேர்ந்த பிறேஸில்நாட்டிற் போய்க் குடியேறவிருக்கின்றனர். இதுவிஷயமாய்ச்சுவாமியார் ஐந்துவருடகாலமாக முயன்றுவந்து கடைசியாக அவருடைய முயற்சி இப்போதுதான் கைகூடியிருக்கிறது. ஹிமேஜிமா என்ற ஜப்பானியதீவில் வசிப்பவர்கள் எல்லோரையுமே தனது நாட்டில் வந்துகுடியேறப் பிறேஸிலிய அரசாங்கம் அதிகாரம் அளித்துள்ளது. அதனால் தற்போது அங்கே இவர்களின் வரவுக்கான ஆயத்தங்கள்செய்யப்பட்டுவருகின்றன.

ஹிமேஜிமா என்ற இச்சிறிய தீவு இரண்டரைச்சதுரமைல் விஸ்தீரணமுடையது. கோட்ரோ என்ற ஜப்பானிய தீவுக்கூட்டத்தில் அடங்கியது. 1637-ம், 38-ம் ஆண்டுகளில் நடந்தேறிய ஷிமாபாரா வேதகலாபனையின் பின்னர் கத்தோலிக்கரின் குழுஒன்று அங்குபோய் அடைக்கலம்புகுந்தபோதுதான் அதன் சரித்திரம் ஆரம்பமானது. இத்தீவிலே 60 பேரைஅடக்கிய 11 குடும்பங்கள் இருக்கின்றன. இவர்கள்எல்லோரும் தங்கள்சமயத்திற்காகத் துன்புறுத்தப்பட்ட கத்தோலிக்கரின் சந்ததியாரே. அங்கே இவர்கள் வைக்கோலால் வேயப்பட்ட எளிமையானவீடுகளில் சஞ்சரித்து வருகிறார்கள். எரிமலைக்குரிய பார்களிடையே ஆங்காங்கு பரந்துகிடக்கும் சிறு துண்டுநிலங்களை உழுதுபயிரிட்டு அதனால் கிடைக்கும் அற்பவூதியங்களைக்கொண்டு உயிர்வாழ்கிறார்கள்.

வண. சஸாக்கிசுவாமியார் இத்தீவுவாசிகளையும், அவர்களின் கஷ்டமான வாழ்க்கையையும் பற்றி 1944-ம்ஆண்டுதான் அறிய வந்தார். தமது உடனொத்த சமயத்தவர்களான அவர்களுக்குத் தம்மால்எவ்விதம் உதவிசெய்ய முடியுமோவென்று நெடுநாள் ஆலோசித்தார். ஈற்றில், நியாயமான சௌகரியத்துடன் அவர்கள் வாழக்கூடிய பிறநாடொன்றில் அவர்களைக் குடியேற்றுவதே நன்றெனக்கண்டார். எனவே, பிறேஸில்நாட்டிலே சாவோபோலோ எனுமிடத்தில் மிகப்பெரிய பண்ணைஒன்றின் சொந்தக்காரரும், தமதுபழையநண்பருமான 65வயதுடைய ஹிஸானொசூகே கனகேஎன்பவருடன் கடிதப்போக்குவரத்து நடத்தி அவர் உதவியைப் பெற்றுக்கொண்டார். அவருடைய ஒத்தாசையால் முன்சொன்ன பதினொருஜப்பானிய கத்தோலிக்ககுடும்பங்களும் அங்குபோய்க்குடியேறுதற்கான அநுமதியைப் பெற்றுக்கொள்ளலாயின.

---

### விசுவாசப் பரப்புதற்சபை நிதி

உலகிலுள்ள நாடுகளுக்கெல்லாம் தற்போது யுத்தோபகரணங்களுக்கென வருடம்ஒன்றுக்கு லட்சகோடிரூபா செலவாகிறதென அமெரிக்க வெளிநாட்டுமந்திரியாயிருந்து காலஞ்சென்ற திரு. ஜோண் டல்லஸ்அவர்கள் மதிப்பிடலாயினர். பங்குனி மாதம் 29-ந்திகதியன்று பி-52 என்ற ஓர்இராட்சத வெடிகுண்டு விமானம் சோதனைக்காகப் பறந்துசென்றபோது வெடித்துப்பாழாயிற்று. இந்தவிமானத்தைக்கட்டச்சென்றசெலவுபணம் நான்குகோடி ரூபாவாகும். இவ்வருடம் விசுவாசப்பரப்புதற்சபைக்கென்று உலகமுழுவதிலும் சேகரிக்கப்பெற்ற பணம் அதைப்போலும் இரண்டுவிமானங்கள்தானும் கட்டுவதற்குப் போதாதிருக்கின்றது.

## வத்திக்கானில் பல்கேரியாவின் முன்னாள் சிமியோன் மன்னர்

பல்கேரியாவின் முன்னாள்அரசரான சிமியோன்மன்னரை அருளப்பபாப்பரசர் சமீபத்திலே வத்திக்கான்மாளிகையில்வரவேற்று ஓர்அந்தரங்கபேட்டி அருளலாயினர். பாப்பரசர் 1920-ம் ஆண்டுமுதல் பல்கேரியாவில் அப்போஸ்தலிக்க ஸ்தானாபதியாய் இருந்தபோது, சிமியோன்மன்னரின் தந்தையாரும், பிரிவினைச்சபையைச் சேர்ந்தவருமான போறிஸ் அரசருக்கும், இத்தாலியசவோய் இராசகுடும்பத்தைச்சேர்ந்த கத்தோலிக்க இளவரசி ஜியோவன்னாவுக்கும் நடைபெற்ற திருமணத்தை ஒழுங்குபடுத்துவதிலே பெரும்பங்கு எடுத்துக்கொண்டார். தம்பதிகள் இருவரும் இத்தாலியிலே அசிஸி நகரிலுள்ள கத்தோலிக்க ஆலயம்ஒன்றில் திருமணம்நிறைவேற்றி வைக்கப்பட்டார்கள். ஓர் பிரிவினைச் சபைக் கோவிலிலே திரும்பவும் தாம் திருமணவைபவம் நிறைவேற்றப் போவதில்லையென்றும், தம்முடையபிள்ளைகளைக் கத்தோலிக்கராகவளர்ப்பதென்றும்போறிஸ்அரசர் அப்போது வாக்குறுதிஅளித்தார். ஆனால், பல்கேரியாவுக்குத்திரும்பியதும் இருவாக்குறுதிகளையுமே அவர்மீறிவிட்டார். முன்னாள் சிமியோன்அரசர் ஓர்கப்புச்சின்சபைக் குருவானவர் சமேதராய்ப் பேட்டிக்குச் சென்றிருந்தார். பல்கேரியாவைக் கம்யூனிஸ்தர்கள் ஆக்கிரமிக்குமுன் அந்நாட்டிலே கப்புச்சின்சபைக் குருமார் அநேகர் இருந்துவந்தார்கள். இவர்களில் ஒருவரே சிமியோன் அரசருடன் கூடிச்சென்ற குருவானவர்.

---

### சமாதான ஞாபகசின்னம்

ஆஸ்திரியாவிலுள்ள மரியாசெல் மகாதேவாலயத்தைச் சேர்ந்த சந்நியாசர்கள் ஆச்சிரமம் சமாதான ஞாபகசின்னம்ஒன்றை அமைக்கும்விஷயமாய்ச் சிற்பவேலைப் போட்டிஒன்று நடத்தவிருக்கிறது. இந்த ஞாபகசின்னத்திலே இரண்டாவது உலகயுத்தம் நடைபெற்றமுக்கியமான யுத்தகளங்களிலிருந்து சேகரிக்கப்பட்டமண் ஒளியூடுருவக்கூடிய கலசங்களில் வைக்கப்படவிருக்கின்றன. இந்தச்சமாதான ஞாபகசின்னம் யுத்தத்திலே உயிர்துறந்தவர்களின் ஞாபகமாக இருந்துவரும். மரியாசெல் மகாதேவாலயத்தில் ஏற்கனவே எழுபதுக்குமேற்பட்ட கலசங்கள் ஸ்தாபிக்கப்பட்டுவிட்டன. இவைகள் எல்அலாமெயின், எகிப்து, ஹிரோஷிமா, ஜப்பான், அவறடோர், பிரான்ஸ்முதலாம் பல்வேறுயுத்தகளங்களிலிருந்துதருவிக்கப்பட்டமண்ணைக் கொண்டிருக்கின்றன. இந்த ஞாபகசின்னம் பற்றியஎண்ணம் ஆஸ்திரிய தேசியஅரசாங்கமகாசபையின் தலைவரும், ஆஸ்திரியாவின் முன்னாள் பிரதமருமான திரு. லெயோப்போல்ட் பிஜிஅவர்களின் மனதில்தான் ஆதியில்உதயமாயிற்று.

## காலையில் ஒப்புக்கொடுக்கும் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர்திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

* * *

## மார்கழி மாதம்

பொதுக்கருத்து: வேதகலாபனைகளினால் வருந்தும் தங்கள்சகோதரர்களுக்காகத் தங்களுடையசெபம், வார்த்தை, கிரியைகளினால் உதவிபுரியத் தங்களுள் எழும் பெரும்ஆத்திரத்தை நெகிழவிடாதிருக்கும்படி வேண்டிக்கொள்வது.

வேதபோதக கருத்து: ஆசிய—ஆபிரிக்கமக்கள் திவ்வியயேசு பிறந்த விழாவின் உண்மையான அர்த்தத்தை உணர்ந்து அதன்வழியாக யேசுவைப்பற்றிய உண்மைஅறிவை அடையும்படியாக மன்றாடிக்கொள்வது.

சத்திய வேத

# பாதுகாவலன்

1959-ம் ஆண்டு
மார்கழி மாதம் 10-ந் திகதி

வண. சாள்ஸ் ஷோவான் சுவாமியாரின்

## தேகவியோகம்

சாந்தம், மவுனம், அடக்கம், பொறுமை, தயை ஆதியாம் சற்குணங்களைத் தமதுஞான அணிகலங்களாகக் கொண்டவரும், நெடுங்காலம் ஆசிரியத் தொண்டில் ஈடுபட்டுப் பல்லாயிரக்கணக்கான பழையமாணவர்களைக் கண்டவரும், சங்கீதத்தில் விற்பன்னரும், லத்தீனில் பேரறிஞரும், அமைச்சலீலே, ஒழுங்கு அனுசாரத்திலே எவர்க்கும் ஓர் மேல்வரிச்சட்டம் போன்றவரும், காலங்கண்ட ஓர்குரவருமாய் நம்மத்தியில் விளங்கியிருந்தவரான வண. சாள்ஸ் ஷோவான் சுவாமியவர்கள் விருத்தாப்பிய நோய்கண்டிருந்து சென்ற3-ந் திகதிவியாழக்கிழமை மரணத்திரையில் மறைந்தாரென்னும் அமங்கலசெய்தியானது அவரின் உடன்ஆசிரியர்களும், பழைய மாணவர்களும், அன்பர்களுமான அனைவருக்கும் பெருங் கவலையைத் தரலாயிற்று. மரிக்கும்போது இவருக்குவயது79.

வண. ஷோவான்சுவாமியார் பிரான்ஸ்தேசத்திலே அல்சாஸ்—லொறேயினைச்சேர்ந்த மெற்ஸ் நகரில் 1880-ஆண்டு மார்கழி மாதம் 17-ந்திகதி பிறந்தார். 1903-ம்ஆண்டு அமலோற்பவ மரியநாயகி சபையில்சேர்ந்து, 1907-ம்ஆண்டு மாசிமாதம்24-ந் திகதியன்று குருப்பட்டம்பெற்றார். பின்னர் 1908-ம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்துசேர்ந்து சில காலம் அர்ச். மார்த்தீனார்குருமடத்தில் பேராசிரியராய் இருந்ததன்மேல் 1914-ம்ஆண்டு சம்பத்திரிசியார்கல்லூரிப் பேராசிரியர்களில்ஒருவராக நியமனஞ்செய்யப்பெற்றார். அதுமுதல் தாம் இளைப்பாறுகிறவரை சுவாமியவர்கள் தமது உடல், பொருள், ஆவிமூன்றையும் சம்பத்திரிசியார் கல்லூரியிலேயே— கல்வித் தொண்டிலேயேசெலவிட்டு எல்லோரதும் நன்மதிப்பைப் பெற்றுவந்தார். லத்தீனிலே ஒரு பாஷாஞானியாயிருந்து அதனை மாணவர்களுக்குப் பயிற்றுவதில் மிக்கானதிறமை பெற்றிருந்தார். ஒரு சங்கீதஞானியாய் மாத்திரமல்ல, ஓர்சங்கீதாபிமானியாயுமிருந்து வாத்தியங்கள் மீட்டுவதிலும், சங்கீதங்களை இங்கிர்தமாகப் பயிற்றுவதிலும் பிரஸ்தாபமுற்றிருந்தார். நம்தமிழ்மொழியைத் தீவிரமாய்எழுதும் ஓர் புதியஇலகுவான சுருக்கெழுத்து முறையைஅடக்கிய "தமிழொலிச் சுருக்கவெழுத்து"எனும் நூலைப் பிரான்ஸிய "துப்பிளோய்" அரிவரியை அடிப்படையாகக் கொண்டு ஆக்கித்தந்து, தமிழ் மக்களுக்கு ஓர்அருஞ்சேவை ஆற்றியிருக்கின்றார். இந்நூலை ஆக்கித்தந்ததோடு நின்றுவிடாது இம்முறையை மாணவர்களுக்குப் பயிற்றியும் வந்திருக்கின்றார். இந்நூல் "இருமொழிக்கொரு வழி" —"தமிழ் - ஆங்கில சுருக்கவெழுத்து"எனும்நாமத்துடன் எமதுஅச்சகத்திலிருந்து வெளிவந்துள்ளது. அவர்கல்லூரிவிடுதிகளைக் கண்காணிப்பவராயிருந்து மாணவர்களையெல்லாம் அன்னை தந்தைபோல் அன்பாய்ப் பராமரித்துவந்தார். தமது உதடுகளில்புன்னகைதவழ 'அளகுளப்' பில்லாதுஅத்துணைகனிவாகஅவர் பேசக்கேட்பது தேனமிர்தம் போன்று எவர்செவிக்குமே ஓர் இனியவிருந்தாகும்.

நாம் முன்னர்எழுதியவாறு, தம்மிடம்விளங்கிய சாந்தம், அடக்கம், கடமைஅனுசாரமுதலாம் சற்குணங்களால் எவர்க்கும் ஓர்மேல்வரிச்சட்டமாயிருந்த சுவாமியவர்கள் புதன்கிழமை தோறும் கொழும்புத்துறைத் தாபனத்தின் பரலோகபாதுகாவலராக விளங்கும் சஞ்சூசைமாதவனின் கோவிலைச்சந்தித்து அவரைப்பக்திசெய்யும் வழக்கமுடையவராய் இருந்துவந்தார். அதனால் அம்மாதவனின் அருளாற்போலும் சுமார்நாற்பது வருடகாலம் சம்பத்திரிசியார் கல்லூரியில் பணியாற்றிய அவர் தம்முடையஅந்தியகாலத்தைஅத் தாபனத்திலே, அவரது அடைக்கலப் பூங்கொடிநிழலில் செலவிடும் அதிர்ஷ்டத்தைப் பெற்றார். தனிவாசத்தையும், புனிதத்தையும் தமதுசீவியகால முழுவதும் ஆசித்துவந்த சுவாமியவர்கள் ஆங்கு ஒருமுனிவர் போன்று தனிவாசஞ்செய்து, செபமாலையும் கையுமாய், செபமும்தியானமுமாய் காலம்கழித்து வரும்போது, சிலதினங்களின் முன்னர் அவர் திடீரெனநோய் கண்டு மேற்றிராசனமாளிகைக்குக்கொண்டுவரப்பட்டு, அந்திய தேவதிரவியானுமானங்களை நல்லறிவுடன்பெற்று அமைதியாகவும், சமாதானமாகவும் இறைவன் அடிசேரலாயினர்,

மரித்தபின் சுவாமியவர்களின் புனிதஉடல் ஆசாரியவஸ்திரங்கள் அணியப்பெற்று மேற்றிராணியாண்டவரின் சிற்றாலயத்தில் வளர்த்தப்படவே, குருமாரும், ஆசிரியர்களும், மாணவர்களும், ஏனையோரும்சென்று அவருக்குத் தங்கள்இறுதிமரியாதையைத் தெரிவித்து அவரது ஆத்தும இளைப்பாற்றிக்காக மன்றாடியவண்ண மிருந்தார்கள். பின்னர் அன்றுசாயந்தரம் ஆசனக்கோவிலிலே மேற்றிராணியாண்டவர் அவர்கள் சுமார்ஐம்பதுகுருமார் சமேதராய்த் துக்கசங்கீதங்கள் பாடிக் கடைசிஆசீர்வாதம்கூறியதும் சுவாமியவர்களின் புனித உடல் அங்குசமுகமாயிருந்த பெருந்திரளானமக்களால் பெரிய ஊர்வலமாகச் சேமக்காலை கொண்டுசென்று மேற்றிராணியாண்டவர்அவர்களே அங்கும் திருச்சடங்குகள் நிறைவேற்றிக் கடைசிஆசீர்வாதம் கூறிநிற்கப் பிரலாபமத்தியில் பூமிதானஞ் செய்யப்படலாயிற்று.

R. I. P.

## தஹநாயக அரசாங்கம்

பிரதமர் டபிள்யு. தஹநாயகாவின்ஆட்சி மறையும்காலம் அதிகம்தூரத்தில் இல்லையென்று அரசியல்வாதிகளும், ஏனையோரும் பலமுறைகளிலும் சொல்லி வந்ததுபோல் சென்ற 5-ந்திகதி சனிக்கிழமை பாராளுமன்றம் கலைக்கப்பட்டுப் பிரதமர்தஹநாயகாவின் ஒன்பதுவாரஆட்சி ஓர் முடிபுக்குவரலாயிற்று. ஜனநாயகத்துக்கும், சட்டத்துக்கும் விரோதமானதென்றும், நீதியற்றதென்றும், நியதியற்றதென்றும், நாட்டையாளும் உரிமையற்றதென்றும், தகைமையற்றதென்றும் அரசியல்வாதிகளாலும், எதிர்க்கட்சியினராலும் மாலைசூட்டப்பெற்ற தஹாவின் அரசாங்கம் சகலமந்திரிகளுக்கும், அரசாங்ககட்சி அங்கத்தவர்களுக்கும், எதிர்க்கட்சியினருக்கும், மற்றெவருக்குமே அதிர்ச்சி தரும்படியாக— ஆச்சரியம் உண்டுபண்ணும்படியாக நினையாப்பிரகாரமாய்ப் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதோடு இறுதி காணுவதாயிற்று. அடுத்தபடியாக இனிமேல் பொதுத்தேர்தல் நடைபெறவேண்டியதுதான். இது அடுத்துநிகழும் 1960-ம் ஆண்டு பங்குனிமாதம்19-ந்திகதி நடந்தேறும். அதன்மேல் அம்மாதம்30-ந்திகதியன்று புதியபாராளுமன்றம்கூடும். தேர்தலில்போட்டியிடும் அபேட்சகர்கள் தங்கள்நியமனபத்திரங்களைச் சமர்ப்பிக்கவேண்டிய தினம் வருகிறதைமாதம் 4-ந்திகதியாகும். தனிச்சிங்களமொழித் திணிப்பாலும், இரத்தப்பெருக்காலும், முன்னில்லாத பெருவெள்ளப் பிரவாகத்தாலும், வகுப்புக்கலவரங்களாலும், சாதி சமயகுரோதவிரோதங்களாலும், அரசியற்கொலையாலும், மற்றும் பலவிதஊழல்களாலும் பெயர் படைத்திருந்து அரசியல்சூறாவளியால் அலைக்களிக்கப்பட்டுவந்த எம். ஈ. பி. அரசாங்கத்தின் ஆதிப் பிரதமர் அது இறுதிகாணுமுன்னரே இறுதிகண்டார். அவரைத் தொடர்ந்துவந்த பிரதமர்தஹாவின் ஆட்சியும் பெரிதும்குழப்பமானநிலையில் இருந்துவந்து கடைசியாக இறுதிகண்டது ஆச்சரியமன்று.



## கிறிஸ்மஸ் காட்டுகள்

கிறீஸ்தவர்கள் என்றமட்டிலே கிறிஸ்மஸ்விழாவில் கிறீஸ்துநாதரை முதல் இடம் பெறச்செய்வதில் துணைபுரிய இயன்றதெல்லாம் செய்வது உங்கள் பெரும் கடமையாகும்.

கிறிஸ்மஸ்வாழ்த்துக் காட்டுகள் அனுப்பும்போது அவைகள் திருக்குழந்தை கிறீஸ்துவையும், அவருடைய திவ்விய பிறப்பையும் பிரதிபலிப்பனவாய் இருக்கும்படி கவனித்துக் கொள்ளுங்கள்!

யானைகளையும், மணிகட்டிய பூனைகளையும், மற்றும் தொடர்பற்ற சித்திரங்களையும் கொண்ட கிறிஸ்மஸ் சோபன காட்டுகளை உங்கள் நண்பர்களுக்கும், உறவினருக்கும் அனுப்பிவைத்துக் கிறிஸ்மஸின் உண்மையான அர்த்தத்தைப் பங்கப்படுத்தாதீர்கள். நீங்கள் மனமுவந்து இம்முறை எனக்கு அனுப்பும் கிறிஸ்மஸ் காட்டுகள் கிறீஸ்து திருக்குழந்தைமயமாய் இருக்குமென நம்புகிறேன்.

கிறிஸ்மஸ்தாத்தா

### வடமாகாணமும் பயிர்ச்செய்கையும்

வடமாகாணத்தின் நிலப்பரப்பு 3,429 சதுரமைலாகும். இதில் ஏறக்குறைய 75 சதுரமைல் நீர்ப்பரப்பாக இருந்துவருகிறது. மொத்தமாகவுள்ள நிலப்பரப்பிலே 10·16 சதவீதமான பரப்பில்தான் இன்று பயிர்ச்செய்கை நடைபெறுகின்றது. இதில் 40 சதவீதப்பரப்பிலே நெற்செய்கை நடைபெறுகிறது. எஞ்சிய 60 சதவீதப்பரப்பும் வான்பயிர்ச் செய்கைநிலமும், தோட்டச்செய்கை நிலமுமாகும்.

### மட்டக்களப்புப் பட்டினசபை

மட்டக்களப்புப் பட்டினசபைத் தேர்தல் சென்றசனிக்கிழமை அமைதியாக நடந்தேறியது. அதில்போட்டியிட்டஐந்துதமிழரசுக்கட்சிஆதரவாளர்களும் வெற்றிபெற்றார்கள். 2-ம்வட்டாரத்தில் போட்டியிட்ட கம்யூனிஸ்த கட்சி ஆதரவாளரும், 3-ம்வட்டாரத்தில் போட்டியிட்ட லங்காசமசமாஜ கட்சி ஆதரவாளரும் தோற்கடிக்கப்பட்டார்கள். தெரிவுசெய்யப்பட்ட ஏனைய அபேட்சகர்கள் ஐவரும் "சுயேச்சை"யாகப் போட்டியிட்டவர்கள்.

### இந்தியாசெல்லும் மாணவர்கள்

படிப்பதற்காக இந்தியாசெல்லவிரும்பும் மாணவர்களுக்குப் பாஸ்போட் வழங்குவதில் கண்டிப்பான நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. இலங்கையில் இல்லாத படிப்புகளும், இலங்கையில் இடங்கிடையாத படிப்புகளுக்குமான சர்வகலாசாலைப் படிப்புகளுக்குமட்டுமே இனிமேல் மாணவர்கள் இந்தியாசெல்லப் பாஸ்போட் வழங்கப்படவேண்டுமெனக் கல்விப் பகுதி தீர்மானித்திருக்கிறது. அதனால் கல்விப்பகுதிக்கு மனுப்பண்ணி அனுமதிபெற்ற மாணவருக்குமட்டுமே பாஸ்போட்டும், பணம்அனுப்ப வசதியும் செய்துகொடுக்கப்படும்.

## பெத்லகேம்—கல்வாரி —பாத்திமா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நன்மைகள் எதிர்கொண்டுவரும் போது, அவளுடைய இருதயம் சந்தோஷத்தால் பூரிக்கின்றது, ஆபத்துகள் எதிர்கொண்டுவரும் போது அவளுடைய இருதயம் கவலையால் தேங்குகின்றது. கல்வாரிமலையிலே கிறீஸ்துநாதரின் மரணவேளை நெருங்குகிறது. மரியம்மாளின் மாபெரும்சோகம் நிறைந்தவேளை அதுவாகும். அநீதியாகக் கொலைக்குற்றம் சாட்டப்பட்டுள்ள தனது திருமகனையிட்டு இருதயத்திலே அவள் பாடுபடுகின்றுள். "அவனைச் சிலுவையில்அறைந்து கொல்லுங்கள்"என்ற அந்தப் பகைவன்மம் கொண்டவர்களது கூச்சல்களின் எதிரொலியானது அவளுடையஇருதயத்தில் கவலையின் பெரும்அதிர்ச்சியை உண்டு பண்ணுகிறது.

(தொடரும்)

## ஆசிரியரின் மறைவு

காவெட்டிவாசரும், உயர்வேளாண் மரபினரும், அவ்வூர் திருஇருதய கல்லூரியில் ஆசிரியராக 38ஆண்டுகள் சேவைசெய்து சென்றஆண்டு இளைப்பாறியவரும், யாழ்ப்பாணம் அஞ்சல் நிலையத்தில் உபஅதிபராகக் கடமையாற்றும் திரு. ஜே. எவ். ஜெயராசாவின் தந்தையும், திருஇருதயகல்லூரி ஆசிரியர் திரு. பி. அன்ரனி இராசையாவின் மாமனரும், குருநகர் சென் ஜேம்ஸ் ஆணபாடசாலை ஆசிரியர் திரு. என். அந்தோனிமுத்து, வடபகுதி அஞ்சல்நிலையங்களின் பிரதமஅதிபர் (டி. எஸ்.)நிலையத்தில் கடமையாற்றும் திரு. என். மரியாம்பிள்ளை அவர்களினது சகோதரனுமாகிய திரு. என். மெல்க்யூர் சிங்காரசா ஆசிரியர்அவர்கள் சென்ற 18-11-59 புதன்கிழமை மாணத்திரையில் மறைந்தார் என்னும் அமங்கலசெய்திகேட்டுத் துக்கமடையாதாரிலர். இவர் அந்தியதேவதிரவியஅனுமானங்களை நல்லறிவுடன் நிறைவுறப்பெற்று, மிகமனஅமைதியுடன்மரணநித்திரையாயினர். மரிக்கும்போது இவருக்குவயது 60.

இவரது மரணசெய்தியை அறிந்ததும் இவரின்உறவினரும், நண்பர்களும், பழையமாணவர்களும் அனுதாபச்செய்திகள் அனுப்ப, பலர்நேர்முகமாகவந்து சேமச்சடங்கில் பங்கு கொண்டனர். திருஇருதயகல்லூரியின் முன்னுள் அதிபராயிருந்த சங். பி. பாக்கியநாதர்பிறதர்அவர்கள் சங். எஸ். ஞானப்பிரகாசம்பிறதருடன் கல்முனையிலிருந்து கடுகதிப்புகையிரதமூலம்வந்து இறுதிமரியாதையில் சேர்ந்துகொண்டார்.

இவரின் பிரேதமானது வேலைப்பாடமைந்த அழகியபேழையில் வைக்கப்பெற்று, மறுநாள்பிற்பகல் நாலுமணியளவில் வேதாசார, தேசாசாரவழமைகளுடன் இனசனர், சுற்றத்தவர், ஊரவர், பழையமாணவர்கள், நண்பர்கள், திருஇருதயகல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள்மத்தியில் கல்லூரிஅதிபர் வண. ஜே. ஏ. கருணைகரர்சுவாமியவர்கள் தலைமையில் வரிசையாகமுஸ் செல்ல, வண. பி. நீக்கலஸ், திருஇருதயக்கல்லூரியின் முன்னுள்அதிபர்கள் வண. தியோகுப்பிள்ளை, வண. பி. இ. அல்விறெட் என்னும்குரவர்கள் சங். சந்நியாசிகளுடனும், பாடகர்குழாமுடனும் துக்கசங்கீதம்பாடிச்செல்ல, சேமக்காலைகொண்டுசென்று, அங்குள்ளஆலயத்தில் இறுதிச்சடங்குகள் நிறைவேறியதும் மேற்படிகுரவர்கள் கடைசிஆசீர்வாதம்கூறிநிற்கப் பிரலாபமத்தியில் நல்லடக்கஞ் செய்யப்படலாயிற்று.

சிங்காரசாமாஸ்றர் என்றால் சிறப்பாகவடமாராட்சியிலும் — பொதுவாக யாழ்ப்பாணநாட்டிலும் அறியாதாரிலர். இவர் கடமையாற்றிய முப்பத்தெட்டுவருடங்களும் கல்லூரிஅதிபர்களுக்கும், கட்டளைக்குரவர்களுக்கும் ஓர்வலதுாகம்போலநின்று பணியாற்றியஉத்தமர். எவரையும் தமதுசாதுரியமொழியால் கவரக்கூடியபண்பும், இன்சொல்பேசும்திறனும், எக்கருமத்தையும் முன்னின்று நடத்தக்கூடிய உறுதிமனமும் உடையவர். இவரை இழந்து துன்புறும் மனைவி, மகள், மகன், பேரப்பிள்ளைகள், மருகன், சகோதர, சகோதரி, மைத்துனர்கள், இனசனருடன் நாமும்அனுதாபப்படுகிறேம்.

R. I. P.

---

புத்தக மதிப்புரை

## மெய்விவாக ஞானேபதேசம்

ஆக்கியோன்:
சங். R. அருளப்பா, D. D.
பிரசுரம்:
தமிழ் இலக்கியக் கழகம், தூத்துக்குடி.
விலை: சதம் 20.

இயல்வேத காலத்திலும், வரிவேத காலத்திலும் விவாகம் சுபாவ உடன்படிக்கையாகமாத்திரம் இருந்தது. அருள்வேத காலமாகிய இன்றே அது புனித தேவதிரவிய அனுமானமாக இருக்கின்றது. எமது ஆண்டவராகிய யேசுநாதசுவாமியே இதனை இவ்வுயரிய அந்தஸ்துக்கு உயர்த்தியருளினர். கிறீஸ்தவர்களுடையவிவாகம் கிறீஸ்துநாதருக்கும், திருச்சபைக்குமுள்ள ஐக்கியத்தைக் குறித்துக்காட்டுகின்றது.

திருச்சபை புனிதமடைய வேண்டுமானல மெய்விவாகம் என்னும் தேவதிரவிய அனுமானத்தைத் தக்கவிதமாய்ப் பெறுதல்வேண்டும். இத்தேவதிரவியஅனுமானத்தின் மகிமை பெருமையையும், அதனல் வரக்கூடிய உயரிய வரப்பிரசாதங்களையும்பற்றி விசுவாசிகள் நன்கு தெரிந்துகொள்ளல் வேண்டும். இந்த உயரியநோக்கை இலட்சியமாகக்கொண்டு "மெய்விவாக ஞானேபதேசம்" என்னும் பெயருடன் தமிழ்இலக்கியக்கழகத்தின் பிரசுரமாக இந்நூல் வெளிவருகின்றது. மெய்விவாகத்தின் மகிமை—இலட்சணங்கள்—விக்கினங்கள்—கடமைகள் என்பன பற்றித் தெளிவாக இதன்கண் விளக்கப்பட்டுள்ளது. உத்தமமான திருமணத்தின் இயல்பைவிளக்கும் ஓர் அரிய கதையும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, இச்சிறுநூல் மெய்விவாக தேவதிரவிய அனுமானத்தைப் பெற்றுக்கொள்பவர்களுக்குத் தக்க பலனளிக்கும் ஒரு கருவூலமென்பதில் எட்டுணையும் ஐயமில்லை. எமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றேம்.

---

### காலநிலை

தொடர்ந்துபெய்த பெருமழையைத் தொடர்ந்து சென்றசில தினங்களாகக் கடும்பனி பெய்துகொண்டு வருகிறது. பனிக்கேற்ற கினிகள் ஏற்கனவே தலைகாட்டத் தொடங்கிவிட்டன.

### பண்டாரநாயகா கொலைவழக்கு

இம்மாதம் 7-ந் திகதியிலிருந்து பின்போடப்பட்ட பண்டாரநாயகா கொலைவழக்கு விசாரணை இம்மாதம் 14-ந் திகதியாகிய வருகிற வியாழக்கிழமை கொழும்பு பிரதம மஜிஸ்றேற் கோட்டில் ஆரம்பமாகும். முதலாம், இரண்டாம் எதிரிகளாக மாபிட்டிகம புத்தரகித்ததேரோ, எச். பி. ஜயவர்தன என்பார்களின் பிரதமவழக்கறிஞரான திரு. ஏ. எச். டி. சில்வா கியூ ஸி. அவர்கள் கேட்டுக்கொண்டதின்பேரிலேயே வழக்குவிசாரணை 14-ந் திகதிக்குப் பின்போடப்படலாயிற்று.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 2838

மாவட்டபுரம் வடக்கு
செல்லையா இரத்தினநாயகம்
— வழக்காளி.
எதிராக
வட்டுக்கோட்டை மேற்கு
சின்னத்தம்பி வைரமுத்து
கைம்பெண் சின்னப்பிள்ளையின் ஆதனத்துக்குத் தத்துவகாரனக நியமிக்கப்பட்ட வைரமுத்து நாராணபிள்ளை
மாவட்டபுரம் வடக்கு
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2838-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1959-ம்ஆ மார்கழிமீ 30-ம்வ (30-12-59) புதன்கிழமை பிற்பகல் 4 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல்வட்டி ரூபா 1150-ம், இதற்குத் தீர்வை ரூபா 650-க்கு 25-5-59 திகதி தொடக்கம், 4-8-59 வரை 100-க்கு 8% வட்டியும், பின் முழுத்தொகையும் இறுபடும்வரைக்கும் 5% வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 227-47½ சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு, வட்டுக்கோட்டை கோயிற்பற்று, வட்டுக்கோட்டை மேற்கு இறை "சத்தியவத்தை" பரப்பு நிலஇலாச்சம் (8-ம்) எட்டும், வீடும், வான்பயிர் செய்பயிர்களும். எல்லை: கிழக்கு — பெருமையினர் ஆறுமுகத்தின் உரித்தாளருக்குரிய காணியும், கை ஒழுங்கை முகப்பும், கண்ணகை அம்மன்கோயிலுக்குரிய காணியும். வடக்கு—கண்ணகை அம்மன் கோயிலுக்குரிய காணி. மேற்கு—சின்னத்தம்பி நாகமுத்துவுக்குரிய காணி. தெற்கு—மூளாய் கிராமஊர் எல்லை. இதன் கிழக்கு வேலி அருகாகவும், வடக்கு வேலி அருகாகவும் மேற்கு எல்லைக் காணிக்குக் குறித்த கை ஒழுங்கை பாவிப்புரித்தும் புறநீங்கலாக. இது அடங்கலும் மேற்குப்புறமாக இருக்கின்ற காணிக்குள் இருக்கும் கிணற்றில் இதற்குரிய ⅓ பங்கும், தெற்கு வேலி அருகாய்த் தூர்வை வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்.

சி. செ. மாரிமுத்து,
கொம்மிஷனர்.

விதானைவளவு,
சித்தங்கேணி,
19-11-59.

---

● கம்யூனிஸ்தர்களை வெற்றிகண்டு அவர்களைக் கட்டுப்பாட்டுள் கொண்டு வந்துள்ள மலாயா அரசாங்கம் இப்பொழுது தன்கவனமுழுவதையும் கிராமப்பகுதிகளின் பொருளாதார அபிவிருத்தியில் ஈடுபடுத்த முடிவுசெய்துள்ளது. தாங்கள் இந்தநாட்டுப் பிரசைகளென்றஉணர்ச்சி மக்கள்மத்தியில் ஏற்பட்டுக் கிராமப்பகுதிகளில் பொருளாதாரம் அபிவிருத்திபடைந்துவிடின், கம்யூனிஸ்தருக்குஇடமேயில்லாமல்போய் விடுமென்று மலாயாஅரசாங்கத்தின் கருத்தாகும்.

● ஐக்கிய அமெரிக்கதேச ரெக்ஸாஸ்நாட்டிலுள்ள 16,00,000 பேருக்கு மேற்பட்ட பப்ரிஸ்த புரொட்டஸ்தாந்தசபைக் கிறீஸ்தவர்கள் எந்தஒரு அரசியல்தேர்தலிலும் கத்தோலிக்கர் ஒருவருக்கு வாக்களிக்குமுன் இருமுறைசிந்திக்குமாறு கேட்கப்பட்டிருக்கிறார்கள். அந்தநாட்டின் பப்ரிஸ்த சபைப் பொதுச்சங்கத்தாலே இந்தஎச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

---

## ரூஷியாவும் கிறீஸ்து சமயமும்

ஐந்துகோடிரூஷியர்கள்—அல்லது சோவியற் ரூஷியாவிலுள்ள இருபதுகோடிமக்களில் நான்கில்ஒருபங்கு விகிதமானவர்கள் ஏதாவதுஓர்கிறீஸ்தவசபையைச் சேர்ந்தவர்களென்று விடுதலைக்கான அமெரிக்ககம்மிற்றி வெளியிட்டுவரும் சஞ்சிகையிலே "சோவியற்ரூஷியாவில்சமயத்துக்கெதிரான யுத்தம்"என்ற தலையங்கத்துடன் வெளிவந்துள்ள அறிக்கை தெரிவித்துள்ளது. "கம்யூனிஸ்தமதம் திருப்தியளிப்பதாய் இல்லையென்று அதிகமதிகம் ரூஷிய இளைஞர்கள் கிறீஸ்தவ சபைகளின் பக்கமாகத் திரும்புகிறார்கள்; கடந்த நாற்பதுவருடங்களிலும் குறித்துவைக்கப்பட்டுள்ளதெல்லாம் சோவியற்மக்களின் சமயஉணர்ச்சிகளை ஒழித்துக்கட்டுவதில்சோவியற்அரசாங்கம் வெற்றிகொள்வது சந்தேகம் என்பதற்குப் போதியஆதாரங்களைக் கொடுக்கின்றது"என்றும் அந்தஅறிக்கை கூறுகின்றது.

---

## கேள்விப்பத்திர அறிவித்தல்

### யாழ்ப்பாண மாநகரசபை 1960.

யாழ்ப்பாணம் பெரியகடையில் இருப்பதும், மாநகரசபைக்குச் சொந்தமுமான பதினன்கு (1—14) ஆட்டிறைச்சிக் கடைகளுக்கும் 1960-ம் ஆண்டுக்குத் தனித்தனியாகக் கேள்விப் பத்திரங்கள் மாநகரசபை ஆணையாளரால் கோரப்படுகின்றது.

மேற்படி கேள்விபத்திரங்கள் 14-12-'59-ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4-30 மணிவரை மாநகரசபை ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேற்படி கடைகளுக்கான கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்க விரும்புகிறவர்கள் அரக்கு முத்திரையிட்ட கடிதஉறைகளிலேயே அவற்றைச் சமர்ப்பிக்கவேண்டுவதுடன் கடித உறையின் மேற்புறத்திலும் "ஆட்டிறைச்சிக் கடைக்கான கேள்விப் பத்திரம்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

ஆ. வ. சின்னையா,
மாநகரசபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
மாநகர மன்றம்,
யாழ்ப்பாணம்.

---



## தே. எட்வீஜம்மாள் பேர்னுந்தின் 18—வது வருட மரண ஞாபகம்

"மின்னிமறையும் மின்னலைப்போல் என்வாழ்நாட்கள் சென்றன. அந்தோ! மரணத்தைப்பற்றி நினைப்பவர்கள் யார்?"

ஓ! மிகவும் இரக்கமுள்ள திவ்விய யேசுவே! திருச்சிலுவையில் தேவரீர் சிந்தின விலைமதியாத திருஇரத்தத்தின் பேறுபலன்களைப் பார்த்து உமது அடியாளாகிய தெ. எட்வீஜம்மாள்பெர்னுந்தின் ஆத்துமத்திற்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும்.

17-12-59இல் 18வதுவருடம் பூர்த்தியாகிறபடியால் இதைக்கண்ணுறும் வண. குருமார், சங்.கன்னியர்கள், சகோதரர், சகோதரிகள், பந்துமித்திரர்கள் கிறீஸ்தவகருணையோடு இவ்வாத்துமத்தின் இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறுதயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேம்.

நேசமனைவியைஇழந்த பத்தா
**ஏ. சந்தானபிச்சை பேர்னுந்து**
நேசத்தாயை இழந்த மக்கள்
**எஸ். ஜேம்ஸ் பேர்னுந்து**
**எஸ். பிண்டோ பேர்னுந்து**
மட்டக்களப்பு.

17-12-59இல் அன்றுதினம் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக மட்டக்களப்பு தேவமாதாகோவிலில் துக்கப்பாடற்பூசை காலை 6மணிக்கு நடைபெறும்.



# இளைஞர் பக்கம்

அன்புமிக்க இளைஞர்களே!

நேர்மையுள்ள ஓர் மனுஷனின் வார்த்தைகளை நம்பி அவற்றை உண்மையென எற்றுக்கொள்வது புத்திக்கு மாறல்ல. அப்படியானல், தேவன் வெளிப்படுத்தும் உண்மைகளை இன்னும் கூடிய நியாயத்துடன் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமல்லவா? சர்வ வல்லப நித்திய ஞான கடவுளொருவர் இருக்கவேண்டுமென்றும், அவர் பூரண உண்மைத்தனம் உள்ளவரென்றும் எமது புத்தியானது சொல்லுகின்றது. எமது புத்திக்கு மேற்பட்ட சில உண்மைகளை அவர் எமக்கு வெளிப்படுத்தக்கூடும். அப்படி வெளிப்படுத்தும்போது, நாம் அவற்றை ஐயமின்றி ஏற்றுக்கொள்ளும்படியாகவும், தாம்தாமே சில மனுஷரை ஆயுதங்களாய்க் கொண்டு அவற்றைச் செய்வதாயும் நாம் உணரும்பொருட்டு, அவற்றைப் புதுமைகளாலும், தீர்க்கதரிசனங்களாலும் தெய்வீக முத்திரையிடுகிருர்.

கிறீஸ்துநாதரின் வருகையின்முன் தாம் தெரிந்தெடுத்த யூத சனத்துக்கு இப்பேர்ப்பட்ட "தெய்வீக வெளிப்படுத்தல்" ஒன்றைத் தேவன் பண்ணியிருந்தார். அவர்கள் அறிவிலும், பண்பாட்டிலும் அதிக மேம்பாடுள்ள சனமாயில்லாவிடினும், அவர்களுக்கு ஏற்றமுறையில், அபூரணமானவிதமாயென்கிலும் தேவன் தம்மை வெளிப்படுத்தச் சித்தங்கொண்டார். மோயீசனதும், இவரைப்போன்ற வேறு சில தீர்க்கதரிசிகளின் மூலமும், அவர்களுக்குத் தெய்வீக உண்மைகளையும், அனுசரணைச் சட்டங்களையும் பிரசித்தப்படுத்தினுர். புதுமைகள்செய்யும் வரமும், பின்வருவனவற்றை முன்னறிவிக்கும் வரமும், அவர்களது சுத்த சீவியமும், தாங்கள் சொல்லிய உண்மைகளுக்கு அத்தாட்சிகளாயிருந்தன.

இத் "தெய்வீக வெளிப்படுத்தல்" யேசுக்கிறீஸ்துநாதரின் மூலமே பூரணமாக்கப்பட்டது. இவரோ மோயீசனைப்போலவும், தீர்க்கதரிசிகளைப் போலவும் ஓர் தூதனுய் மாத்திரம் இருக்கவில்லை. தேவனின் குமாரனுயும், மனுஷசுபாவத்தை யெடுத்துதித்த நரதேவனுயுமிருக்கிருர். இவருடைய வருகைக்கே, பிதாப்பிதாக்களும், தீர்க்கதரிசிகளும் நாலாயிரம் வருஷகாலமாய்க் காத்திருந்தார்கள்.

ஞானப்பிதா

—(※)—

<u>புனிதர் வரலாறு</u>

## அர்ச். யுவக்கீனு வெடுனு டி மாஸ்

(முன்தொடர்ச்சி)

1826-ம் ஆண்டு விச்நகரின் கோர்குயிரு மேற்றிராணியார் யுவக்கீனு ஒருபுதிய கன்னிகாசபையை அடியிடுவதை ஊக்குவித்தார். ஈஸ்றபென் என்ற கார்த்தூசியன்சபைக் குருவானவர் ஒழுங்குகளை வகுத்துக் கொடுத்தார். கார்மேல்சபைத் தருமகன்னியர்கள் என்ற பெயரோடு விச்நகரில் ஆறுபுதிய அங்கத்தவர்களுடன் சபை ஆரம்பமாயிற்று.

1834-ம் ஆண்டுமுதல் 1836-ம் ஆண்டுவரை நடந்த வேதகலாபனையிலே இவர்கள் கிறீஸ்துவின் உண்மைத் தியாகிகளாக விளங்கினர்கள். புதியசபை காற்றலோனியா நாடுமுழுவதும் பிரபலமாயிற்று. திரும்பத் திரும்பப் பலஉள்நாட்டுக் கலகங்களும், போரும் நாட்டைச் சின்னுபின்னமாக்கின. அந்நாட்களில் இந்தக் கன்னியர்கள் காயப்பட்டோரை இருதரப்பிலுமே பராமரிப்பதில் ஈடுபட்டனர். பலமுறை அரசியல் கொடுமைகளால் இவள் நாடுகடத்தப்பட்டாள்.

1884-ம் ஆண்டு மாசி 8-ந் தேதி அர்ச். அந்தோனியோ மரிய காளற் போதித்த ஞானஒடுக்கத்தின்பின் சபைமுதல்வியும், மற்றவர்களும் நித்திய வாக்குத்தத்தம் செய்துகொண்டனர். அதன்பின் சங். யுவக்கீனுதாயார் தனது சென்மநாட்டில் பல புதிய வைத்தியசாலைகளையும், பாடசாலைகளையும் திறந்தார்.

பின்னர் 1851-ம் ஆண்டு பாரிசவாதத்தினுல் வருந்தி நடமாடவும், பேசவும்கூட முடியாதவளானுர். நோய்வாய்ப்பட்டகாரணமாகச் சபைச் சிரேஷ்டர் பொறுப்பைத் துறந்து சாதாரண கன்னியாஸ்திரியாக வாழ்ந்துவந்தார். இவர் அசையக்கூடாத நிலையில் இருந்தாலும் ஒவ்வொரு நாளும் திவ்வியநன்மை வாங்கத் தவறமாட்டார்.

கடைசிநாட்களில் தனதுகுமாரத்திகளில்ஒருவர் சிரேஸ்டராயிருந்த மடத்தில் வசித்துவந்து 1854-ம் வருடம் ஐப்பசி 7-ம் தேதி தனது 71-ம் வயதில் மரணமானுர்.

இவரின் புனிதஉடல் அவருடைய சொந்தநகரான விச்சிலே அவர் ஸ்தாபித்த மடத்தேவாலயத்தில் அடக்கம் செய்யப்படலாயிற்று. இவர் தனது மடத்தில் செபம்செய்யும்பொழுது பரவசமாகி அந்தரத்தில் ஆகாசகமனமாய் எழுவதும், அவரதுசிரம் ஒளிக்கதிர்களால் சூழப்படுவதும் சாதாரண காட்சிகளாக இருந்துவந்தன.

பரிசுத்தபிதா 11-ம் பத்திநாத பாப்பானவர் குடும்பவாழ்க்கைக்கு ஓர் நன்முன்மாதிரியாக அமைந்த இப்பரிசுத்த விதவையின் முத்திப்பேறுபெற்ற பட்டத்திற்குத் தாமாகவே முன்வந்து முயன்றுர். 12-ம் பத்திநாத பாப்பானவரால் 1940-ம் ஆண்டு வைகாசி மாதம் 19-ம் தேதி அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்தில் இப்புனிதவதிக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம் அருளப்பட்டது.

முத் யுவக்கீனுவுடைய திருநாள் வைகாசிமாதம் 22-ம் தேதி கொண்டாடப்படுகின்றது.

— எஸ். எம். ஏ.

---

ரோசாப்பூவானது தனதுநிறத்தையும், வாசனையையும் வேரிலிருந்து பெற்றுக்கொள்ளுகின்றது மனிதனே இளம்பருவத்திலிருந்தே தனது நற்குணங்களையும், புண்ணியங்களையும் பெற்றுக்கொள்ளுகிருன்.

* * *

சீவியத்தின்எந்நிலையும்அததற்குரிய ஆபத்தைக் கொண்டுள்ளது. ஆயினும், வாலிபவயசுதான் ஒருவனை அதன்வலையிற் சிக்குண்ணப்பண்ணுவது. நற்குணங்களை மனதிற்பதிக்கும் வசந்தகாலம் இதுவே.

**ஆகமன காலத்திலவரும் 3-ம் ஞாயிறு**

(அரு. I, 19—28)

## "நீங்கள் அறியாத ஒருவர் உங்கள்மத்தியில் நிற்கிருர்"

தனது ஆத்துமத்தை இழந்துபோகிறதிலும் பார்க்கப் பெரிய துன்பம் ஒருவனுக்கில்லை. அதுவும், தனது சொந்த முயற்சியினுலேயே தேடிக்கொண்ட துன்பமென்பதை உணர்ந்துகொள்வோமானுல், இதைவிட்ட மனச் சஞ்சலம் வேறென்றுண்டா? பாவியானவன் தெரியாத்தனத்தினுலே செய்துவிட்டேனேயென்று சொல்லவிடமில்லை. ஏனெனில் தேவகற்பனைகளும், திருச்சபைக் கற்பனைகளும் அவன் கடமையை உணர்த்தி நிற்கின்றன; மனச்சாட்சியானது அவனுக்குவழிகாட்டி நிற்கின்றது, தேவஅருளின் பொக்கிஷமானது சோதனை வேளையில் அவனுக்குத் திடம்கொடுக்க உதவும்படி இருக்கின்றது. யூதர்கள் கிறீஸ்துநாதரை வேண்டாமென்று தள்ளியபோது தெரியாமற் செய்தோம் என்று சொல்வதற்கிடமிருந்தது. ஆனுல், எமக்கோ அப்படிப்பட்ட சாட்டு இல்லை. ஏனெனில், இளம் பராயம்தொட்டு அவரை அறிந்திருக்கிறோம். அவரையறிந்து நேசியாமலிருந்திருப் போமேயாகில், அது எங்களது பிழையாகவேயிருந்திருக்கும். "நீங்கள் அறியாத ஒருவர் உங்கள் மத்தியில் நிற்கிருர்" என்று யேசுக்கிறீஸ்துநாதரையிட்டு யூதர்களுக்கு அர்ச். யுவானியார் சொன்ன வார்த்தைகள் இதையே நினைவூட்டுகின்றன.

"சபிக்கப்பட்டவர்களே என்னைவிட்டகன்று நித்திய நரகத்துக்குப் போங்கள்" என்ற நித்திய நீதிபரரின் வார்த்தைகள், மனஸ்தாபமின்றிச் சாவான பாவத்துடன் மரிக்கும் பாவியின் கிருத்தியங்களுக்கு முறையின்படி வந்து சேரவேண்டியதாகிய முடிவு என்றே சொல்லவேண்டும். தேவன் தான் படைத்த ஆத்துமத்தைச் சபித்துத் தள்ளுவதில்லை. ஆத்துமம் தான் தானே பாவத்தால் தன்னைச் சபித்துத்தள்ளுகின்றது. அப்படித்தள்ளும் ஆத்துமத்தின் செயலைத் தேவன் அங்கீகரித்துத் தமது நீதியின் தீர்ப்பைச் சொல்லுகிருர்.

ஆத்துமமானது தனக்கு எச்சரிக்கைகள் தரப்படவில்லையேயென்று சொல்லவிடமில்லை. ஏனெனில், திரும்பவும் திரும்பவும் தேவனின் இரக்கமானது ஆத்துமம் பாவவழிகளை விட்டு மனஸ்தாபப்படாவிட்டால் என்ன நடக்கப்போகிறதென எச்சரிக்கை பண்ணியிருக்கிறது. திருச்சபையும், தேவதிரவிய அனுமானங்களும் அதற்கிருந்தன. தெரியாத்தனத்தாலல்ல, மற்றேரின் நெருக்கிடையாலல்ல, தெரிந்துகொண்டும், படித்தறிந்த கற்பனைகளுக்கு மாருகவும், தேவஉதவியை உதறி எறிந்துவிட்டுமே ஆத்துமம் பாவஞ் செய்துவிட்டது. தனது கிருத்தியங்களுக்கும், அவற்றுல் வந்த நிர்ப்பாக்கிய முடிவுக்கும் ஆத்துமமே பொறுப்பாளி.

எப்படியெனினும், மரணமட்டும் ஒருகாரியம் எங்களாலியலும்; மனஸ்தாபப்படவியலும். எங்களில் எல்லோரும் சீவியத்தின் ஓர் நாளிலாவது நரகத்தீர்வைக்கு உள்ளாகிற நிலைபரத்திலிருக்கிறோம். மனஸ்தாபக் கண்ணீரானது எம்மைக் காப்பாற்றியது ஆயின், மனஸ்தாபத்தின் கண்ணீர் சொரிய மனமின்றி, கடினப்பட்டிருக்கும் ஆத்துமத்தின் நிலைபரமோ, ஐயோ! பரிதாபத்துக்குரியதே.

— B. P. ஜெயம்.

---

## ஆசிரிய சிறுவன்

அமெரிக்க குடும்பம் ஒன்றிலே ஆறுவயசுடைய ஜேர்மனிய அனுதை பிள்ளையொன்று எடுத்து வளர்த்துவரப்பட்டது. நத்தால் கொண்டாட்ட நாட்களின்போது, ஓர்நாள் அக்குடும்பத்தார் பிள்ளையையும் கூட்டிக்கொண்டுசாய்ப்புக்கள் பார்க்கப்போனுர்கள். சிறுவனைச் சந்தோஷிப்பிப்பதற்காய் விளையாட்டுச் சாமான்கள் விற்கப்படும் சாய்ப்பு ஒன்றில் பிரவேசித்தார்கள். உள்ளே சென்ற நேரந்தொடங்கிப் பையனே வெகு பரபரப்புடன், ஓடிஓடி, ஒவ்வோர் மேசையினதும் அருகே சென்று, ஏதோ ஒரு பொருளைத் தேடுவதாகக் காணப்பட்டான்.

"என்னதேடுகிருய் தம்பி" என்று வினவியபோது, பையன் "குழந்தையெங்கே, குழந்தையெங்கே" என்று காத்திரத்துடன் சத்தமிட்டான். அங்கு நின்றவர்களுக்கு யாதொன்றும் புலப்படவில்லை. அப்போது சாய்ப்பின் உத்தியோகஸ்தர் சிலர் கூடி ஏதோ ஆலோசித்தார்கள். அதன்பின், அவர்களில் ஒருவர் மேலே சென்று ஒரு பாலன் பிறந்த சுரூபத்தைக் கொண்டுவந்து மற்றச் சாமான்களுடன் கூட வைத்தார். அப்போதான் பையனின் அங்கலாய்ப்புத் தீர்ந்தது. தான் தேடிய பொருள் அதுதானென்று தன் செய்கையால் காட்டினவன்போலப் பொருளை இரு கைகளாலும் கட்டிப் பிடித்தவண்ணம் நின்ருனும்.

நத்தால் திருநாளின்போது அதை நினைப்பூட்டக்கூடிய யாதொன்றும் இல்லாதவீடு வீடல்ல, சாய்ப்புச் சாய்ப்பல்ல, நத்தால்சோபனக் கடிதம், கடிதமல்ல. இவ்வுண்மையை எம்மவர்க்கும் படிப்பிக்க ஜேர்மனிய சிறுவனு வரவேண்டும்.

குறிப்பு: (நத்தாலின் அர்த்தத்தை விளக்கக்கூடியதும், கொப்பிக்கடதாசியில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாததுமான இது போன்ற வேறு பல கதைகள் வைப்படுகின்றன.)

---

## நேயர் கடிதம்

கனம் ஆசிரியர் அவர்கட்கு வணக்கம். கடந்தவாரம் வெளிவந்த (19-11-59) பாதுகாவலன்பத்திரிகையில் இளைஞருக்கென ஓர்பக்கம் ஒதுக்கப்பட்டிருப்பதைக் கண்டு பெரிதும் மகிழ்ச்சியடைந்தேன். இதற்காக உங்களுக்கு என் இதயபூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இளைஞர்களின் சந்தேகங்களை நிவர்த்திசெய்து கொள்ளுவதற்கும், அவர்களுடைய எழுத்து வன்மையைக் காட்டுவதற்கும் இப்பகுதி அவசியமாகிறது.

மேலும், ஒருசிறிய வேண்டுகோள் இப்பகுதியில் "பொறுக்குமணி" என்று தலைப்பிட்டு அதில் இளைஞர்களின் அபிப்பிராயக் கடிதங்களை வெளியிட்டால் நலமெனஎண்ணுகிறேன். அத்தோடு அடிக்கடி இளைஞர்களிடையே விவாதங்களை எழுப்பினுல் எத்தனையோ நன்மைகள்விளையும்.

ஆகையால், தயவுசெய்து கூடிய சீக்கிரம் இவர்களின் சந்தேகங்களைத் தீர்க்கக்கூடிய வகையில் ஒரு தொடர்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

# பாலர் பக்கம்

அன்புத் தம்பி - தங்கையரே!

பாலர் பக்கத்துக்கு விடயங்கள் அனுப்பும்பொழுது தாளின் ஒருபக்கத்தில் மாத்திரம் எழுதவேண்டும். வேறு பத்திரிகைகளிலோ, சஞ்சிகைகளிலோ பார்த்தெழுதி அனுப்பாதீர்கள் என்பதை, வெகு கண்டிப்பாகக் கூறுகிறோம். விடயங்கள் எல்லாம் உங்கள் சொந்தக் கற்பனையாகவே இருக்கவேண்டும்.

பாலர்பக்கத்தில் நீங்கள் விரும்புவதென்ன? உங்களைக் கவர்ந்த அம்சம் என்ன? இன்னும் சேர்க்கப்பட வேண்டும் என்று நீங்கள் விரும்பும் அம்சம் எதுவென்று எமக்கு எழுதுங்கள்.

அண்ணா

## மரியாயும் மருள்நிறையுலகமும்

"உங்களை இரட்சிக்க நாம்ஓர் இரட்சகரை அனுப்புவோம்" என்பது, சர்வேசுரன் ஆதாம், ஏவாளுக்குக் கொடுத்த உறுதிவாக்கு. அந்த உறுதிவாக்கு நிறைவேறத் தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரம் தேவதாய். யூதேயாநாட்டில், தாவீதுகோத்திரத்தில் உற்பவத்திலேயே மாசில்லாதவளாய்த் தோன்றினாள் மரியாள். புத்திவிபரம் அறிந்தநாட்தொடக்கம் கெட்டுப்போன மனுக்குலத்தின் ஈடேற்றத்திற்காக உயராதஊக்கத்தோடும், தளராதநம்பிக்கையோடும் சருவேசுரனை மன்றாடினாள். மெசியாவின் வருகையைத் துரிதப்படுத்த வேண்டுமென்பதே அவளதுசெபத்தின் முதற்குறிக்கோள். இப்படியான நிலையில் சருவேசுரனின் திருச்சித்தம் இவ்விதமான பணிபுரிய ஆரம்பித்தது? செபத்தின் குறிக்கோளை முற்றுப் பெறச் செய்யும் முதல்வியாகக் கன்னி மரியாளையே ஏற்படுத்தச் சித்தங்கொண்டது.

எனவே கன்னி மரியம்மாளிடம் கபிரியேல் சம்மனசானவர் சென்று திவ்வியபிதாவின் திருச்சித்தத்தை எடுத்துக்கூறினார். அவளும் பணிந்த மனதுடன் ஆண்டவரின் அழைப்பை ஏற்றுக்கொள்ளுகிறாள். சாதாரண பெண்களைப்போன்று தாமும் வறுமையான, எளிமையான கஷ்டங்கள்நிறைந்த சீவியம்சீவிக்கிறாள். ஆயினும், சாந்தமே குடிகொண்ட, புன்முறுவல்பூத்த, முகத்தினளாய்ப் பிரதிபலிக்கிறாள். இதோ நமது கன்னிகையின் பேறுகாலம் அண்மிவிட்டது. தரித்திரத்தில் தமது குமாரனைப் பெற்றெடுத்தாள். ஒன்றன்பின் ஒன்றாக, பலவகையான துன்பதுரிதங்களுக்கு உள்ளாகிறாள். அவளுடைய இதயமானது வியாகுல வாள்களால் ஊடுருவப்பட்டது. இதுமட்டுமா,

இதோ எப்பக்கம் நோக்கினும் வேதனை சூழ்ந்திருக்குங்காலம் சமீபித்துவிட்டது. குமாரனுக்கு முப்பத்திமூன்று பராயம் பரிணமித்தது. எந்த மனிதருக்கு, எந்தத் தேசத்தாருக்கு உண்மை வழியை எடுத்துக்காட்டினாரோ, அவர்களே—ஐந்துநாட்களுக்குமுன் வாயார, மனமார வாழ்த்திப் புகழ்ந்த அவர்கள் நாவுகளே அன்று ஏககுமாரனைச் "சிலுவையில் அறையும், அறையும்" என்று கூக்குரலிட்டன.

கொடிய வேதனைகள், மனிதனெவனும் இதுகாலவரையும் அனுபவித்திராத, இனிமேல் ஒருபோதும் அனுபவிக்கப்படாத நிஷ்டூரங்கள், ஈற்றில் சிலுவைமரணம். மரிக்குமுன் இதோ தன் திருச்சுதனின் பாதகமலங்களின் அடியில் துக்கசாகரத்தில் அமிழ்ந்திய தாயார் சோகமே உருவெடுத்து நிற்கிறாள். குமாரனின் அகோர வேதனையைக் கண்டு, அனலில் இட்ட புழுப்போல் துடிதுடிக்கிறாள். அந்த நேரமே திவ்வியயேசு மனுக்குலம் முழுவதையும் தம்தாயின் திருக்கரத்தில் ஒப்படைக்கிறார். தேவதாயும், தம்து திருக்குமாரனுக்குச் சொல்லொணா வேதனை வருவித்தோரையும், அவர்களின் சந்ததியாரையும், பூவுலகவாசிகள் அனைவரையும் தமது பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டார். மனுக்குலத்தவரின் நன்றிகேடுகளையும், தீச்செயல்களையும் அறவே மறந்தாள். கொண்டாள் பேரன்பு. தாய்மையுள்ளம் தணிவிலா அன்பு கொண்டு, வெள்ளம்போல் பாய்ந்தோடத்தொடங்கியது.

ஒளியின் புத்திரரை மாத்திரமல்ல, இருளின் புத்திரரையும் அன்புக் கரங்களால் அணைக்கிறாள்—அரவணைக்கிறாள். அணைப்பை உதறிச் செல்பவர்களையும் அந்தத் தாய் ஒருபோதும் மறந்துபோவதில்லை. தருணம் பார்த்துக்கொண்டே இருக்கிறாள். வெள்ளை உள்ளத்தினரும், உலகப்பற்றற்ற உத்தமரும், வறுமைப்பட்டோருமே தேவதாயின் நெருங்கிய பந்துக்களாவர். அன்று லூர்து என்ற பட்டினத்தில், மசபியேல் குகையில் தேவதாயார் யாருக்குக் காட்சிகொடுத்தார்? வறுமைப்பட்ட, கல்வி அறிவற்ற, சரீரப்பெலன் குன்றிய, சிறுமி பெர்ணதேத் என்பவளுக்கல்லவா? போர்த்துக்கால் தேசத்தில், பாத்திமா என்ற இடத்தில், யாசிந்தா, லூசியா, பிரான்சீஸ் என்ற மூன்று இடையப் பிள்ளைகளுக்கல்லவா காட்சி கொடுத்தார். இக்காட்சியிலிருந்து தேவதா

(அடுத்தபக்கம் பார்க்க)

## பேபெல் கோபுரம்

சருவேசுரன் நோவாவுக்குப் பல பிள்ளைகளைக்கொடுத்தார். அவரின் பிள்ளைகட்கும் பலபிள்ளைகளைக் கொடுத்தார். அதனால் சிலகாலத்தில் சனம்பெருகி இவ்வுலகத்தை நிறைத்தது. அக்காலத்தில் உலகில் யாவரும் ஒரேபாஷையைப் பேசி வந்தனர். அதனால் ஒருவர் சொல்லுவது மற்றவருக்கு விளங்குவது சுலபமாயிருந்தது.

ஒருமுறை அவர்கள் கிழக்கிலிருந்து பிரயாணஞ்செய்து சினார் (SHINAR) என்னும்இடத்தில் சேர்ந்தனர். அங்கே அமைதியுடன் வாழ்ந்து வரும் நாளில் ஒருசிலர், "நாங்கள் செங்கற்களைச் செய்து ஒரு பெரிய கோபுரத்தைக்கட்டியெழுப்புவோம் அது நுனிவானத்தைத் தொடும்" சலப்பிரளயம் வந்தாலும் நாம் பயப்படவேண்டியதில்லை என்றுசொல்லி அக்கோபுரத்தைக் கட்டத் தொடங்கினர்.

அங்கு இருந்தவர்கள் பலருக்கு இவர்கள் ஏன் இந்தக் கோபுரத்தைக் கட்டுகிறார்கள் என்பதுபுரியவில்லை. ஆனால், இவர்கள் ஏதோ பிழையான நோக்கத்தோடேயே இதைச் செய்கிறார்களென அறிந்துகொண்டனர். கட்டுவேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்பொழுது சருவேசுரன் மோட்சத்திலிருந்து, இக்கோபுரத்தைப்பார்ப்பதற்காக, இவ்வுலகத்துக்கு வந்தார்; அக்கோபுரத்தைக் கண்டதும் மிகவும் கோபமடைந்தார். இக்கொடியவர்களைத் தொடர்ந்தும் அக்கட்டிடத்தைக் கட்டி முடிக்க விடக்கூடாது என்று எண்ணி அவர்களை வெவ்வேறு பாஷைகளைப் பேசச்செய்தார். அதனால் ஒருவர், ஒருவரோடு பேச முடியாது தவித்தனர், தடுமாறினர். சாந்து கொண்டுவரும்படி ஏவினால் கல்லுக்கொண்டு வருவார்கள். கூடை எடுத்துவரும்படி கூறினால் வேறொன்றையே கொண்டு வருவார்கள். இப்படியே அங்கு குழப்பம் ஏற்பட்டது. தம் காரியம் நிறைவேறாமல் தவிடுபொடியாக்கப்பட்டதை எண்ணி வெட்கமும் துக்கமும் அடைந்தனர். கோபுரமும் கட்டி முடிக்க இயலாமலிருந்தனர்.


அதன்பிறகு அவர்கள் எல்லோரும் ஒன்றாய்ச் சேர்ந்து வாழ விரும்பவில்லை. ஒரே பாஷை பேசின சிலர் மாத்திரம் ஒன்றாய்ச் சேர்ந்து வசித்தனர். இப்படியே நம் முன்னோர் பகுதி பகுதியாகப் பிரிந்து உலகத்தின் பல்வேறு பாகங்களில் பரந்து வசித்தனர் என அறிய முடிகின்றது.


அவர்கள் கட்டிய பேபெல் கோபுரத்தைத் தொடர்ந்தும் கடவுள் கட்டவிடவில்லை. பேபெல் என்றால் கருத்து குழப்பம், கடவுளின் சாபப்படி சனங்கள் பல பாஷைகளைப் பேசினர். அதனால் எல்லோரும் ஒருவரை ஒருவர் விளங்கிக் கொள்வது கஷ்டமாயிருந்தது. அதனால்தான் அங்கே குழப்பம் உண்டானது. இதுவே, பாஷைகள் பல பிறந்தமைக்குக் காரணமாகும்.

—சந்தானநாயகம்

### உங்களுக்குத் தெரியுமா?







இந்தநூற்றாண்டின் திருப்பத்திலே ஐக்கிய அமெரிக்கதேச வியோமிங்கிலே அப்போதிருந்த கரடுமுரடான மேற்குஎல்லைப்புறத்துக் கோடிஎன்றநகரம் கோவிலைக்கொண்டிருக்கவில்லை. அந்நகர்வாசிகள் தங்களுக்கு ஓர்கோவில்வேண்டுமென அங்கலாய்த்துக் கொண்டிருந்தார்கள். ஓர்நாள் சாயந்தரம் கீர்த்திபெற்ற "பவ்வலோ பில்" கோடி உட்பட அந்நகர ஆடவர்குழுஒன்று 'போக்கர்'என்ற சீட்டுவிளையாடிக் கொண்டிருந்தது. பந்தையங்கள் அதிகமாயின. இந்தவிளையாட்டுச் சந்தோஷத்துக்காக நடைபெறுவதால் அப்படிப்பட்ட ஒருதொகையை எவரும்வென்றுகொண்டு போகப்படாதென்றும், அந்தப்பணம் கோவிலுக்கெனக் கொடுபடவேண்டுமென்றும் ஆலோசனை கூறப்பட்டது. இந்தவிதமாகக் கோடி நகரிலே கிறைஸ்ற்சேர்ச் (எபிஸ்கோபல்) என்றகோவில் 'போக்கர்' சீட்டு விளையாட்டால் ஆரம்பிக்கப்பட்ட நிதிகொண்டு கட்டப்படலாயிற்று.

(2) உலகின் மகாநிதானமான "நாடாஅளவு" தென்கரோலினாவிலுள்ள மவுண்வில்சனிலும், மவுண்சான்அன்ரோனியோவிலும் இருந்துவரும் ஐக்கியஅமெரிக்கதேச அரசாங்கத்தின் அளவைவிதிக்குரிய நிலையங்களுக்கிடையிலுள்ள 22மைல்நீளமுடைய அஸ்திபாரமான ரேகையாகும். இந்தத்தூரமானது ஒளியின் வேகத்தை நிர்ணயிப்பதில் வானசாஸ்திரிகளுக்கு உதவிசெய்வதற்காக அளந்துகட்டப்பட்டது. இது 68,00,000-இல் ஒருபகுதியாக மாத்திரமேஉள்ள ரூபகத்தினுள் — அன்றேல் 22மைலுக்கு ஒருஅங்குலத்தின் பத்தில்இருபாகத்தினுள் சரிவரஅடங்கியதாகும். இதுமுக்கோணமுறையாக எக்காலத்திலாவது கண்டறியப்பட்ட மகாப்பெரும் நிதானபாகையை வர்ணிக்கிறது.

(3) 1752-ம் ஆண்டிலே ஓர்காற்றாடிகொண்டு பெஞ்சமின் பிறாங்லின்என்பவர் நடத்தியபெயர்பெற்ற ஆராய்ச்சியிலே மின்னல்என்பது மின்சாரமென்றும், இடியும், மின்னலுமுள்ள மேகம் மின்சாரசக்தி உண்டுபண்ணும் யந்திரமென்றும் காண்பித்தார். விஞ்ஞானிகள் ஏனென்று இன்றுமேசரிவர அறியவில்லை. ஆனால், பரஸ்பரதாக்கம் அவ்வளவு மும்முரமாயிருப்பதால் வடதுருவத்திலிருந்து தென் துருவத்துக்கு மின்சாரஅமுக்கம்பரந்து வெளிச்சத்தையும், வெப்பத்தையும், ஒலியையும் உண்டுபண்ணும் ஓர்கறன்ரைப் பிறப்பிக்கிறதுஎன்று நம்புகிறார்கள்.

# இனம்! இனம்! இனம்!

## எல்லோருக்கும் இனம்!

இனம்! இனம்!

1-ம் பரிசு — உஷா தையல் மெஷின்
2-ம் பரிசு — குறுண்டிக் றேடியோ (பற்றறி மொடல்)
3-ம் பரிசு — கைக்கடிகாரம் (மாதருக்குரியது)
4-ம் பரிசு — மண்ணெண்ணெய் அடுப்பு
5-ம் பரிசு — மின்சார இஸ்திரிக்கைப் பெட்டி
6-ம் பரிசு — ஜூனியர் காஷ்மீர் சாறியும், சட்டையும்
7-ம் பரிசு — 3 ஹெண்ட்லி ஷேட்டுகள்
8-ம் பரிசு — பாக்கர் பேனு
9-ம் பரிசு — 1 செற் X 100-ம் நம்பர் வேஷ்டி சால்வை
10-ம் பரிசு — சிறுவர் மழைக்கோட்டு

இவை யாவும் 30—11—59 தொடக்கம் 24—12—59 வரை நடக்க இருக்கும்

எங்கள் மகத்தான

# நத்தார் பண்டிகை மலிவு விற்பனையில்

கிடைக்கும்.

பரிசு நிபந்தனைகள் :

1. உங்கள் 50/- ரூபா பெறுமதியான கொள்முதல் ஒவ்வொன்றுக்கும் எங்கள் பரிசுக் கூப்பன் ஒன்றைப் பெறுவீர்கள். நீங்கள் பரிசுகளை ஈட்டிக்கொள்ள இப்பரிசுக் கூப்பன்கள் உதவும்.
2. மேற்கொண்டு செய்யப்படும் ஒவ்வொரு 50/- ரூபா பெறுமதியான கொள்முதலுக்கும் மேலும் ஒரு பரிசுக் கூப்பன் கிடைக்கும்.
3. கூறைச் சேலை வாங்குவோரும் இப் பரிசுத் திட்டத்தில் பங்கு பெறலாம்.

சாறி எம்போறியத்தில் மார்கழி 24-ந் தேதி வியாழக்கிழமை மாலை 4-30 மணிக்குப் பரிசுக் கூப்பன்கள் குலுக்கப்பட்டுப் பரிசுகள் வழங்கப்படும்.

மணிப்புரி, பங்களூர், மைசூர், காஞ்சீபுரம், பெனரிஸ் பட்டுச் சேலைகளும், கோயம்புத்தூர், சேலம், மதுரைக் கைத்தறி நூல் சேலைகளும், நைலோன் ஜோஜட், சில்க் சாறிகளும், இதர புடவை வகைகள் யாவும் எங்களிடம் புதுப்புது டிசைன்களில் கிடைக்கும்.

நினைக்க முடியாத வகையில் சகல ரகங்களிலும் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. வேறெங்குமே இவ்வளவு இலாபகரமான சகாய விற்பனையைக் காணமுடியாது.

நாளைப் போக்காது வேளைக்கே உங்கள் நத்தார் புடவைகளை வாங்கி எமது பரிசுத் திட்டத்தில் கலந்துகொள்ளுங்கள்!

# சாறி எம்போறியம்

## 222, கே. கே. எஸ். வீதி,

## யாழ்ப்பாணம்.


### மரியாயும் ......

(பாலர்பக்கத் தொடர்ச்சி)

யார் யாரை நேசிக்கிறர் என்பது வெளிப்படையாகின்றது.

தேவதாய் மனிதசாகியத்தினரின் மாதா. அதனால், பிள்ளைகளாகிய எல்லோர்மட்டிலும் தாய்க்குரியகடமைப்பாடு ஒன்று அவவுக்குண்டு. தேவதாய் குறைவற்ற சம்பூரணமான தாய். அவவிடம் இல்லாத பொருள் ஒன்றுமில்லை. உலகத்தாய்மார் ஓர்கால் இறந்தொழிவார்கள். தேவதாயோ நித்தியமான தாய். எக்காலமுமிருக்கும் தாய். ஞானவரங்களினால் பூரணப்படுத்தப்பட்டிருக்கிறள். கையில் வெண்ணெயிருக்க ஊரெங்கும் நெய்தேடித்திரிந்த மூடன் போல, நாமும் தருணதருணங்களில் நடந்துகொள்ளுகிறோம். ஈற்றில் கண்விழித்துக் கதிகலங்குகிறோம்.

ஆகவே, நாம் தாயின் தாளிணை அடைவோம். எமது கஷ்டநஷ்டங்களை எடுத்துரைப்போம். எமது சீவியமாகிய கப்பல் துன்பங்கள் நிறைந்த சமுத்திரத்தில் சென்றுகொண்டிருக்கிறது. அது நேரான பாதைவழியே செல்லுவதற்கு வழிகாட்டியாகத் தேவதாயாரைத் தெரிந்துகொள்ளுவோம். அப்படியாயின், எங்கள் கஷ்டங்களெல்லாம் இன்பமாகமாறும். வாழ்க்கைப் படகு கொந்தளிப்பின்றி அமைதியாகத் தனது பிரயாணத்தை நடத்தும். ஈற்றில் மோட்சமாகிய துறைமுகத்துக்குச் சேமமே வந்து சேரும்.

ஆகவே, நாம் அனைவரும் தேவதாயில் நம்பிக்கைவைப்போம். அவவைச் சரணடைவோம். எங்கள் வழிகாட்டியாக, ஊன்றுகோலாக, அடைக்கலமாக, ஆதரவாக வைத்துக்கொள்வோம்.

"மரியாயின் பிள்ளை ஒருபோதும் அவலமாய்ச் சாகாது".

### உபதேர்தல்கள் நிறுத்தப்பட்டன

பாராளுமன்றம் சென்ற வெள்ளிக்கிழமை நள்ளிரவு கலைக்கப்பட்டதன் விளைவாகக் கோப்பாய், வவுனியா, அத்தனகலை, கவவீவாத் தொகுதிகளில் நடைபெறத் தயாராயிருந்த இடைத்தேர்தல்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

### அத்தனகலை இடைத்தேர்தல்

காலஞ்சென்ற பிரதமர்பண்டாரநாயகாவின் மரணத்தாலே பாராளுமன்றத்தில் காலியான அத்தனகலைஸ்தான உபதேர்தல் அடுத்துநிகழும் தைமாதம் 16-ந்திகதிநடைபெறவிருக்கிறது. திருமதி பண்டாரநாயகாவும், திருமதி மாசிலின் டிசில்வாவும் இந்தஸ்தானத்துக்குப் போட்டியிடுகின்றார்கள்.

---

● பரீஸ்நகரின் சுற்றுடலிலே ரோயோமொண்ற் எனுமிடத்திலுள்ள சந்நியாச ஆச்சிரமத்தில்கூடிய சர்வதேச கட்டடக்கலைஞர்களின் மகாநாடுலூன்றுலூர்துபதியிலே நிலமட்டத்தின்கீழ் கட்டப்பெற்றுள்ள அர்ச். பத்திநாதரின் மகாதேவாலயத்துக்கு— அதன் தலைசிறந்த சிற்பவேலைப்பாடுகளையிட்டு முதலாவது வெகுமதி வழங்கியிருக்கிறது.

● அருளப்ப பாப்பரசர் சென்ற கார்த்திகைமாதம் 25-ந்திகதியன்று தமது 78-வது பிறந்தபெருநாளைக் கண்டுகளிக்கலாயினர். அவர் திருச்சபையின் தலைவராகப் பதவியேற்றபின் கடந்த ஒருவருடகாலத்திலும் ஒன்பது நாடுகளின் அரசர்கள் அல்லது ஜனாதிபதிகளும், பல்லாயிரக்கணக்கான மக்களும் அவருடையபேட்டியைப் பெற்றிருக்கிறர்கள்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

பரிசுத்தசதாசகாயமாதாவிடம் நான் இரந்து மன்றாடியபடி என்மகளுக்கு உண்டானவருத்தம் குணமானது. எனது நன்றியைத் தெரிவித்து நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்.

எலிசபேத்—பிலிப்பையா

* * *

யேசுவின் திருமுக இரக்கத்தினாலும், அர்ச். சதாசகாயமாதாவின் மன்றாட்டினாலும் தற்பொழுது என்னுடைய கொடிய பாரிசவாய்வு நோய் சிறிதுகுறைவடைந்து வருகிறது. இதற்காக, என் மனமார்ந்த நன்றியைத் தாழ்மையாகத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். முற்றிலும் இந்நோய் குணப்பட யேசுவின் திருமுகம் அருள்புரிவதாக.

எஸ். டி. எவ்.

* * *

மருதமடுச் செபமாலைமாதா, அர்ச். அந்தோனியார் இவர்களின் மன்றாட்டாலும், அர்ச். சதாசகாய நாயகியை நம்பிச்செய்த இடைவிடா நவநாட் பலனினாலும், நான் கேட்டுக்கொண்ட காரியம் சித்தியடைந்தமைக்கு நன்றிகூறி, நேர்த்திப்படி இதனைப் பிரசுரிக்கிறேன். மாதாவின் நாமம் என்றும் புகழப்படுவதாக!

ஜி. எம்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, December 10-1959.